# மாதவி

டாக்டர் மு. வரதராசன்

தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் நூலகம்
தஞ்சாவூர்.



நாதன்

T14597
R005D05
T. 14597

# மாதவி

டாக்டர் - மு. வரதராசன், எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி

SUPPLIED BY
SELVI'
PATHIPPAHAM
KARAIKUDI.

விற்பனை உரிமை:

**பாரி நிலையம்**

59, பிராட்வே, சென்னை - 1

ரூ. 1—4—0

டிசம்பர், 1955

**உரிமை ஆசிரியர்க்கு**

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை சென்னை—14

# நன்றியுரை

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆனரரி ரீடராக (Honorary Reader) ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள் செய்யுமாறு பல்கலைக் கழகத்தார் அன்பு கூர்ந்து பணித்தனர். அந்த ஏற்பாட்டின்படி 1945 அக்டோபர் 17-ல் 'சிலப்பதிகாரத்துள் மாதவி' என்னும் பொருள் பற்றிப் பேச நேர்ந்தது.

அந்தச் சொற்பொழிவை நூல்வடிவாக வெளியிட விரும்பிப் பல்கலைக் கழகத்தாரின் அனுமதியைக் கோரினேன். அவர்களும் அன்புடன் அனுமதி அளித்தனர்.

இவ்வாறு இப் பொருள் பற்றி ஆராய்ந்து பேசவும், பேசியதை நூல்வடிவாக வெளியிடவும் உதவிய சென்னைப் பல்கலைக் கழகத்தார்க்கு நன்றியறிதலுடையேன்.

மு. வ.

வரலாறு ... 5

பண்புநலன் ... 19

# வரலாறு

## அரசறிந்த வாழ்வு

தமிழகத்தில் காவிரியாறு கடலொடு கடக்கும் இடத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு பாட்டு ஒலித்தது. வடநாட்டில் கங்கையாற்றங்கரையில் இருவர் தலை நெரிய நேர்ந்தது. மாதவி என்னும் தமிழ்நாட்டு மங்கை யாழ் எடுத்துப் பாடினாள். கனகவிசயர் என்னும் வடநாட்டு மன்னரின் முடித்தலைகள் கல் சுமந்து நெரிந்தன.

> **வாழ்க எங்கோ மாதவி மடந்தை**
> **கானற் பாணி கனக விசயர்தம்**
> **முடித்தலை நெரித்தது...**

(சிலப். நீர்ப்படைக். 49-51)

இவ்வாறு மாடலன் என்பவன் சேரவேந்தன் செங்குட்டுவனிடம் வந்து எடுத்துரைத்தான்.

கலைச்சுவைக்கும் கல்சுமைக்கும் தொடர்பு என்ன என்று செங்குட்டுவனுக்கு விளங்கவில்லை. "வேற்று நாட்டு அரசர் பலர் அறிய முடியாத வேடிக்கை ஏதோ கூறினாய். நீ கூறியதன் பொருள் என்ன?" என்று மாடலனை நோக்கிக் கேட்டான். மாடலன் விளக்கிக் கூறினான்: "மாதவி கோவலனோடு கடற்கரையில் மகிழ்ந்திருந்தபோது ஊடல்கொண்டு கானல்வரி பாடினாள். அந்தப் பாட்டைக் கேட்டதும் ஊழ்வினை காரணமாகக் கோவலன் மாதவியை விட்டுப் பிரிந்தான். கண்ணகியுடன் மதுரைக்குச் சென்றான். அங்கே சிலம்பை விற்கச்சென்று கொலைக்களப் பட்டான். கண்ணகி அங்கிருந்து உன்

நாட்டிற்குள் புகுந்து, உன்னோடு வந்து வடநாட்டு மன்னர்களாகிய கனகவிசயரின் மணிமுடியில் ஏறினள்" என்றான்.

இவ்வாறு சேர வேந்தன்மட்டும் அல்லாமல் சோழ வேந்தனும் அறியுமாறு விளங்கியவள் மாதவி.

**கலையரசி**

சோழநாட்டுப் பெருநகராக விளங்கிய காவிரிப்பூம் பட்டினத்தில் சித்திராபதி என்னும் பெயர் கொண்ட கணிகைக்கு மகளாய்ப் பிறந்தவள் மாதவி. தன் குல முறைப்படி மகளை வளர்த்துப் பெருமை பெற வேண்டும் என்று சித்திராபதி முயன்றாள். ஆடல் பாடல் அழகு என்னும் மூன்று துறையிலும் ஒரு குறைவும் இல்லாமல் மாதவி கற்றுத் தேறும்படியாகச் செய்தாள். ஏழு ஆண்டுகள் இந்தக் கலைக்கல்வியிலேயே கழிந்தன. பன்னிரண்டாம் ஆண்டில் இந்தக் கலைகளைக் கற்றுத் தேர்ந்தவளாக விளங்கினள் மாதவி. சோழமன்னன் முன்னிலையில் அவளுடைய ஆடல் பாடல் அழகுக் கலைகளுக்கு அரங்கேற்றம் நடத்த விரும்பினர் சித்திராபதியும் குடும்பத்தைச் சார்ந்தவர்களும்.

அவ்வாறே மன்னவன் முன்னிலையில் அரங்கேற்றம் ஏற்பாடு ஆயிற்று. நாட்டிய ஆசிரியன், இசை ஆசிரியன், தமிழ் ஆசிரியன், தண்ணுமை ஆசிரியன், குழல் ஆசிரியன், யாழ் ஆசிரியன் ஆகியவர் உடனிருந்து துணைசெய்தனர். நாடக அரங்கு மிகச் சிறந்த முறையில் விளக்குகளாலும் ஓவியத்திரைகளாலும் விதானங்களாலும் மாலைகளாலும் அழகுபெற அமைக்கப்பட்டது. ஆடல் கலைக்கு உரிய தலைமையான சிறப்புகள் எல்லாம் செய்யப்பட்டன. நாடக அரங்கிலே மாதவி வலக் காலை முன்வைத்து ஏறி வலத் தூணைப் பொருந்தி நின்றாள். மங்கல இசை முழங்கியது.

குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே...

(சிலப். அரங்கேற்று. 139-141)

மாதவி ஆடினாள்; பொன்னால் ஆகிய பூங்கொடி ஆடுவதுபோல் நாட்டியநூலின் இலக்கணத்தை நன்கு கடைப்பிடித்து ஆடினாள். அரசன் மகிழ்ந்து போற்றி ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்னைப் பரிசாக அளித்தான்; தலைக்கோல் பட்டத்தோடு, பச்சைமாலை ஒன்றையும் அளித்தான். அரங்கேற்றம் இனிது நடைபெற்றது. சித்திராபதியும் மற்றவர்களும் மகிழ்ந்தனர். மாதவி கலையரசியாக விளங்கத் தொடங்கினாள்.

அரங்கேற்றம் முடிந்தவுடன், மாதவியின் குடும்பத்தார் கணிகையர்குல முறைப்படி மாதவியைச் செல்வன் ஒருவனுடைய காமக்கிழத்தியாக்க விரும்பினர். அரசன் அளித்த பச்சைமாலையை ஒரு கூனியின் கையில் கொடுத்து நகரத்தில் சிறந்த தெருவில் நிற்கச் செய்தனர்; ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் கொடுத்து மாலை வாங்கியவனுக்கு மாதவி உரியவள் ஆவாள் என்று தெரிவிக்கச் செய்தனர். கூனி அவ்வாறு தெருவில் நின்றபோது, அந்நகரத்தில் மிகப் பெருஞ் செல்வனான மாசாத்துவான் மகன் கோவலன், கேட்ட அளவு பொன் கொடுத்து மாலையை வாங்கிக்கொண்டு அந்தக் கூனியோடு மாதவியின் வீட்டிற்குச் சென்றான். அன்றுமுதல்கொண்டே அவன் மாதவியினிடத்தில் தீரா விருப்பம் கொண்டு மயங்கி அங்கேயே தங்கிவிட்டான். தன்னுடைய மனைவியாகிய கண்ணகியையும் தன் வீட்டையும் மறந்து மாதவியிடம் வாழத் தொடங்கினான்.

காவிரிப்பூம்பட்டினத்தின் சிறந்த விழாவாகிய இந்திர விழா, சித்திரையில் முழுமதிநாளில் வந்தது. மக்கள்

எல்லோரும் புத்துணர்வு பெற்று விழாவில் கலந்து மகிழ்ந் தனர். கண்ணகி தனித்து வருந்திக்கொண்டிருக்க, மாதவி கோவலனுடன் மகிழ்ச்சியாக இருந்தாள். இந்திரவிழாவி லும் மாதவி பலவகை ஆடல்கள் ஆடினாள். பதினொரு வகையான ஆடல்களை அந்தந்த ஆடலுக்கு உரிய அணி யோடும் கொள்கையோடும் பாட்டோடும் ஆடிச் சிறப்பித் தாள். விழா முடியும் நிலைமை வந்தது. அவளுடைய ஆடலும் கோலமும் அணியும் ஒருவாறு முடிந்தன. இவற்றைக் கண்டு வெறுப்போடிருந்த கோவலன் மகிழும் படியாக மாதவி தன் கோலத்தையும் அலங்காரத்தையும் மாற்றி, புதிய வகையில் தன்னைக் குறைவறப் புனைந்து கொண்டாள். பலவகை அணிகலன்களையும் எடுத்து அணிந்துகொண்டாள். கோவலனோடு இருந்து அவனை மகிழ்வித்தாள்.

**கடற்கரை நிகழ்ச்சி**

முழுமதி நாளில் காவிரிப்பூம்பட்டினத்து மக்கள் பலர் கடலில் நீராடச் சென்றனர். மாதவி கடல்விளையாட்டைக் காண விரும்பினாள். வைகறையிலேயே கோவலனும் மாதவியும் கடற்கரைச் சோலையை நோக்கிப் புறப் பட்டனர். கோவலன் கோவேறுகழுதைமீது ஏறினான். மாதவியும் நன்றாக அலங்கரித்துக்கொண்டு வண்டியில் ஏறிச் சென்றாள். கடைத்தெருக்களின் வழியாகவும் மற்ற நெடுந்தெருக்களின் வழியாகவும் சென்றனர். கடற்கரையில் நடக்கும் பலவகை வாணிகங்களையும் கண்டுசென்றனர். அவரவர்கள் தம்தம் வாணிகத்திற்காக ஏற்றிய பல்வேறு விளக்குகளால் மணலில் வெண்சிறுகடுகு விழுந்தாலும் கண்டெடுக்கக்கூடிய அவ்வளவு ஒளியோடு கடற்கரை விளங்கியது. தாழை பூத்து விளங்கிய கடற்கரைச் சோலை, தாமரை பூத்த மருத வேலி போல் அழகுறத் தோன்றியது. அரசிளங்குமரரும் அவர்களுடைய துணைவியரும் சுற்றத்

தாரும் ஆடல்மகளிரும் பாடல்மகளிரும் மற்றும் பல கூட்டத்தாரும் திரைகளால் இருக்கைகள் வகுத்துக்கொண்டு தங்கியிருந்தனர். வேறு வேறு தோற்றமும் வேறு வேறு ஒலியும் மிகுந்து திருவிழா நடக்கும் களம்போல் சிறப்பு விளங்கியது. கடற்கரையில் இடம் இல்லை என்னுமாறு மக்கள் கூட்டம் கூட்டமாகத் திரண்டிருந்தனர். கடற்கரையில் மீன்நாற்றம் முதலியவற்றை மாற்றி மணம் கமழும் பூக்கள் பூத்து விளங்கிய தாழை மரங்களின் பக்கத்தே ஒரு புன்னைமரத்து நிழலில் புது மணல்பரப்பில் ஓவியத் திரைகளைச் சூழவிட்டு மேலே விதானமும் கட்டி ஒரு சிறந்த இருக்கை வகுக்கப்பட்டது. அதனுள் யானை மருப்பாலாகிய வெண்கால்களை உடைய கட்டில் ஒன்றில் கோவலனும் மாதவியும் இருந்தனர். சித்திரம் வரைந்த ஆடை அணிந்து, கோட்டுமலர் புனைந்து, மணமகள்போல் அழகாக விளங்கினாள் மாதவி.

வசந்தமாலை கையில் யாழை வைத்துக்கொண்டு நிற்பதைக் கண்ட மாதவி, அவள் கையிலிருந்து யாழைத் தொழுது வாங்கினாள். அந்த யாழ், பத்தர், கோடு, ஆணி, நரம்பு என்னும் நான்கு உறுப்புக்களும் குற்றம் தீர்ந்து விளங்கிய யாழ். அதன் நரம்புகளைக் காந்தள் மலர் போன்ற மெல்லிய விரல்களால் மாதவி தடவி இசை எழுப்பிப் பார்த்தாள். மரகதமணி பதித்த மோதிரங்களை அணிந்த விரல்கள் யாழ் இசைக்கத் தொடங்கியபோது இன்னிசை செய்யும் வண்டின் சுற்றம்போல் தோன்றின. இசை நூலில் வகுத்த எட்டுவகையாலும் இசை எழுப்பி, யாழ் பொருந்த அமைந்திருப்பதைக் கண்டாள். பிறகு, "யான் ஒன்றும் இசை விதிக்கவில்லை, தாளம் இன்னதெனச் சொல்லுங்கள்" என்று கேட்டவாறே கோவலன் கையில் அந்த யாழை நீட்டினாள்.

கோவலன் அதைக் கையில் வாங்கிக் காவிரியைப் பற்றிய ஆற்றுவரிப் பாடல்களும் கானல்வரிப் பாடல்களும்

பாடி மாதவியின் மனம் மகிழுமாறு யாழ் இசைக்கத் தொடங்கினான். அந்தப் பாடல்களில் காதலன் ஒருவன் தன் காதலியை நினைந்தும் நோக்கியும் கூறுவனவாகக் காதல் கருத்துக்களை அமைத்துப் பாடினான்.

அந்தப் பாடல்களைக் கேட்ட மாதவி, அவன் உள்ளத்தில் ஏதோ காதல் குறிப்பு இருப்பதாகவும், வேறு மாதினிடத்தில் விருப்பம் கொண்டிருப்பதாகவும், அவன் முன் போல் இராமல் தன் நிலை மாறி மயங்கியிருப்பதாகவும் எண்ணினாள். மகிழ்ந்தவள்போல் நடித்து, உள்ளத்தே ஊடல்கொண்டு, அவன்கையிலிருந்த யாழை வாங்கித் தான் பாடினாள். கோவலன் பாடியதுபோலவே, தானும் காதல்குறிப்பு உடையவள்போல் காதல் கருத்துக்கள் அமைந்த பாடல்கள் பாடினாள். நிலமகள் வியக்கும்படியாகவும், உலகமக்கள் மனம் மகிழும்படியாகவும் யாழிசையோடு பொருந்த இசைப்பாடல்கள் பாடினாள்:

**கானல்வரிப் பாடல்கேட்ட மான்நெடுங்கண் மாதவியும்**
**மன்னும்ஓர் குறிப்புஉண்டுஇவன் தன்நிலை மயங்கினான் எனக்**
**கலவியான் மகிழ்ந்தாள்போல் புலவியால் யாழ்வாங்கித்**
**தானும்ஓர் குறிப்பினள்போல் கானல்வரிப் பாடல்பாணி**
**நிலத்தெய்வம் வியப்பெய்த நீள்நிலத்தோர் மனம்மகிழக்**
**கலத்தொடுபுணர்ந்தமைந்தகண்டத்தால்பாடத்தொடங்குமன்**

(சிலப். கானல். 24)

காதலி ஒருத்தி காதலன்பிரிவுக்கு ஆற்றாமல் வருந்துவனவாகக் காதல்கருத்துக்கள் அமைந்த பாடல்களை மாதவி பாடினாள். அவற்றைக் கேட்ட கோவலன், "இவள் வேறோர் இடத்தில் மனம் வைத்து இவ்வாறு பாடியிருக்கிறாள். பொய் பல சேர்ந்த மாய வாழ்க்கை உடையவள் ஆகையால் இவ்வாறு பாடினாள்" என்று எண்ணி மனம் முறிந்தான். யாழிசையைக் காரணமாகக் கொண்டு ஊழ்

வினை வந்து உருத்தமையால், உடனே மாதவியை விட்டுப் பிரிந்து ஏவலாளர் சூழ்ந்துவர அங்கிருந்து சென்றான். உடனே மாதவி மிகவும் சோர்ந்த மனத்தோடு வண்டியினுள் ஏறி உட்கார்ந்து, தனியே வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தாள்.

கடிதம் இரண்டு

அது இனிய இளவேனில் காலம். பொதிய மலையிலிருந்து தென்காற்று அசைந்துவந்தது. குயில் தன் இன் குரலால் கூவியது. கடல்விளையாட்டில் கோவலன் ஊடிப் பிரிந்த காரணத்தால் வருந்தித் திரும்பிய மாதவி வானளாவிய மாடியின்மேல் ஏறி நிலாமுற்றத்தில் அமர்ந்தாள். பதுமாசனம் இட்டு உட்கார்ந்து யாழைக் கையில் எடுத்து இனிய இசை பாடினாள். வேறு வேறு பண்ணை இசைத்தாள். அவள் மனம் அமைதி இழந்தமையால் இசை மீண்டும் மயங்கியது. கோவலனுக்குத் திருமுகம் எழுதி அழைக்க வேண்டும் என்று எண்ணினாள். சண்பகம், மாதவி, பச்சிலை, பித்திகை, மல்லிகை, கழுநீர் ஆகியவற்றைக் கொண்டு தொடுத்த ஒரு மாலையை எடுத்தாள். அவற்றின் இடையே அமைந்த தாழையின் வெண்ணிறத் தோட்டில் அயலில் அமைந்த பித்திகை அரும்பைக்கொண்டு செம்பஞ்சிக் குழம்பில்தோய்த்து எழுதினாள் : "உலகத்தில் எல்லா உயிர்களையும் தம் தம் துணையோடு சேர்த்து மகிழ்விக்கும் இளவேனில் அரசாள்கிறான். திங்களும் நேர்மையானவன் அல்லன். கூடியவர் பிரிந்தாலும், பிரிந்தவர் மறந்தாலும், மலரம்பு எய்து உயிர்கொள்ளும் ஆட்சி உள்ளது. இதை அறிந்தருள வேண்டும்" என்று கலைகளில் தேர்ந்த தேர்ச்சி விளங்க, இசையினும் இனிய மழலை மொழியால் சொல்லிச் சொல்லி எழுதி முடித்தாள்.

துயரத்தால் பசந்த மேனியோடு, வசந்தமாலையை அழைத்து, " இந்த மலர்மாலையில் எழுதியுள்ள செய்தியைக்

கோவலனுக்குத் தெரிவித்து அழைத்து வருக" என்று கூறி அனுப்பினுள். வசந்தமாலை அதை எடுத்துச் சென்று, கோவலனைக் கண்டு அவனிடம் மாலையைக் கொடுக்க நீட்டினுள். "பலவாறு நடிப்பதில் வல்ல ஆடல்மகள் அவள். ஆதலின் அவளுக்கு அந்த நடிப்பெல்லாம் பொருந்தும்" என்று கோவலன் வெறுப்புடன் கூறி, மலரிதழில் எழுதிய அந்தத் திருமுகத்தைப் பெற மறுத்தான்.

அவன் மறுத்ததைக் கண்டு வசந்தமாலை வருந்தி வாடினுள். மாதவியிடம் சென்று கூறினுள். கேட்ட மாதவி, "இன்று மாலையில் வராமற் போயினும் காலையில் வரக் காண்போம்" என்ருள். ஆயினும் சோர்ந்த மனத்தோடு மலர்ப் படுக்கையின் மேல் பொருந்தாமல் வருந்தினுள் :

**மாலை வாரார் ஆயினும் மாணிழை**
**காலைகாண் குவம்எனக் கையறு நெஞ்சமொடு**
**பூமலர் அமளிமிசைப் பொருந்தாது வதிந்தனள்**
**மாமலர் நெடுங்கண் மாதவி தானென்.**

(சிலப். வேனில். 115-118)

மறுநாள் கோவலன் கண்ணகியோடு புறப்பட்டுப் பெற்ருேர்க்கும் தெரியாமல் நகரத்தை விட்டுச் சென்று விட்டதாகவும், ஏவலாளர் பல திசைகளிலும் தேடிச் சென்றிருப்பதாகவும் செய்தி அறிந்த வசந்தமாலை அதை மாதவியிடம் சென்று கூறினுள். கேட்டதும் மாதவி பெருந்துயருற்று வருந்தினுள். அவளுடைய பெரிய மாடி வீட்டின் ஒரு மூலையில் படுக்கையில் வீழ்ந்துகிடந்து துன் புற்ருள். அவளுக்கு உற்ற துயரத்தைக் குறித்துக் கேள்வியுற்ற கோசிகன் என்பவன் அவளுக்காக மிக வருந்தி ஆறுதல் கூறச் சென்றிருந்தான். கோசிகனைக் கண்ட மாதவி துயரக்கோலத்தோடு அவனைத் தொழுது, "என் துயரை நீங்களே தீர்க்க வேண்டும். ஒரு திருமுகம் எழுதித்

தருவேன். என் கண்மணி போன்றவரை எங்காவது தேடிக் கண்டு அந்தத் திருமுகத்தை அவரிடம் சேர்க்கவேண்டும்". என்று வேண்டினாள்.

"அடிகளின் திருவடிகளுக்கு வணக்கம். என் திருந்தாச் சொற்களைத் திருவுளத்தில் கொள்ள வேண்டும். பெற்றோரின் கட்டளை இல்லாமலும், குலமகளாகிய துணைவியோடு இரவிலேயே பிரிந்து சென்றதற்குக் காரணமான என் குற்றத்தை அறியாமல் கலங்கி நிற்கும் என் உள்ளத்தின் வருத்தத்தைத் தீர்த்தருள வேண்டும். பொய்யற்ற அறிவுடைய பெரியோய் போற்றி."

*அடிகள் முன்னர் யான்அடி வீழ்ந்தேன் ;*
*வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும் ;*
*குரவர்பணி அன்றியும் குலப்பிறப் பாட்டியோடு*
*இரவிடைக் கழிதற்கு என்பிழைப்பு அறியாது*
*கையறு நெஞ்சம் கடியல் வேண்டும் ;*
*பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி*

(சிலப். புறஞ்சேரி. 87-92)

என்று ஓலையில் எழுதி, தன் கூந்தலால் முத்திரையும் இட்டாள்.

அந்தத் திருமுகத்தை எடுத்துக்கொண்டு கோசிகன் பல வழியிலும் திரிந்து தேடினான். மதுரைக்குச் செல்லும் வழியில் ஒரு சிற்றூரின் வழியாகக் கோசிகன் போய்க்கொண்டிருந்தபோது, ஊருக்கு வெளியே வழியோரத்தில் இருந்த ஒரு நீர்நிலையைநோக்கிக் கோவலனைப் போன்ற ஒருவன் போய்க்கொண்டிருந்ததைக் கண்டான். மனைவியோடு காட்டு வழியில் வந்ததை நினைந்து நினைந்து வருந்தி மெலிந்து வாடி உருவம் வேறுபட்டிருந்த காரணத்தால்,

அவனை எளிதில் அடையாளம் கண்டு அறியக் கோசிகனால் முடியவில்லை. ஆயினும் தன் ஐயத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக ஒரு முயற்சி செய்தான். அங்கே படர்ந்திருந்த குருக்கத்தியின் அருகே சென்று, அதன் வேறு பெயராகிய 'மாதவி' என்பதைச் சொல்லி, "மாதவிக் கொடியே! நீ இந்த வேனிலால் துன்புற்று, கோவலனைப் பிரிந்து கொடுந்துயர் அடைந்து வருந்தும் மாதவியைப் போலவே, மலர் எல்லாம் இழந்து வாடுகிறாயே!" என்றான்.

இதைக் கேட்டதும் கோவலன் திரும்பிப் பார்த்து, "நீ இப்பொழுது சொன்னது என்ன?" என்று கேட்டான். உடனே கோசிகன் தன் ஐயம் தீர்ந்து, அவனே கோவலன் என்று தெளிந்து, நெருங்கிச் சென்று, நிகழ்ந்தன எல்லாம் உரைத்தான்.

தன் பிரிவை அறிந்த தாயும் தந்தையும் மணி இழந்த நாகம்போல் பெருந்துயர் அடைந்து கலங்கியதையும், சுற்றத்தார் உயிர் இழந்த யாக்கைபோல் சோர்ந்ததையும் கேட்ட கோவலன் மிக வருந்தினான். தான் செய்த தவறு நினைந்து தன்னை நொந்துகொண்டான். கோசிகன் மாதவியின் துயரத்தை எடுத்துரைத்து அவள் கொடுத்த திருமுகத்தைக் கோவலன்கையில் நீட்டினான். கோவலனுடைய மனத்தை அந்த ஓலையின் முத்திரையில் கமழ்ந்த மணம் கவர்ந்தது. மாதவி கூந்தலால் ஒத்தியிட்ட முத்திரை ஆகையால், அந்தக் கூந்தலின் நறுமணம் அதில் சிறிது கமழ்ந்தது. தானும் அவளும் உடன் இருந்த காலத்தில் இட்ட நெய்யின் (எண்ணெயின்) மணமாகையால், கோவலன் அதைக் கைவிட முடியாதவனாய் நினைந்து நின்றான். விரித்துப் படித்துச் செய்தி உணர்ந்தான்.

உடனே கோவலன்மனத்தில் மாதவி குற்றம் அற்றவள் என்ற எண்ணம் தோன்றியது. "அவள் ஒரு குற்றமும் செய்யவில்லை. எல்லாம் என் குற்றமே" என்று நிகழ்ந்தவற்றை எண்ணி உண்மை உணர்ந்தான். பிறகு

அந்தத் திருமுக்கம் தன் தந்தைக்கு அவ்வாறே அனுப்புதற்கு உரியதாய்ப் பொருள் பொருந்தியிருந்ததை அறிந்தான். கோசிகனைப் பார்த்து, " இந்த முடங்கல் என் தந்தைக்கு அனுப்பும் செய்தியும் பொருத்தமும் உடையதாய் நன்றாக அமைந்திருக்கிறது. தந்தைக்கு என் வணக்கத்தைத் தெரிவித்து இதை யான் கொடுத்தனுப்பியதாகக் கொடுக்க வேண்டும். நீ திரும்பிச் சென்று என் பெற்றோரின் துன்பத்தையும் மனத்துயரையும் நீக்கி உதவ வேண்டும்" என்று கூறி அனுப்பினான்.

## துயரம்

தன் முயற்சி பயன்படாமை உணர்ந்த கோசிகன் காவிரிப்பூம்பட்டினத்திற்குத் திரும்பினான். மாதவியிடம் கோவலனுடைய மனப்பான்மையைத் தெரிவித்தான். மாதவி செய்வது இன்னது என்று அறியாமல் கலங்கித் துன்புற்றிருந்தாள். தான் பிறந்த குலத்தையும் கணிகையரின் வாழ்க்கையையும் ஆடல்கலையையும் பழித்துத் தன்னை நொந்துகொண்டிருந்தாள்.

சில நாட்களில் மாதவி, எதிர்பாராத கொடுஞ் செய்தி கேட்டு வருந்தி நொந்து வாழ்க்கைப் போக்கையே மாற்றிக் கொள்ள நேர்ந்தது. மாடலன் என்பவன் புண்ணியத் துறைகளில் ஆடித் தன் ஊராகிய காவிரிப்பூம்பட்டினத்திற்குத் திரும்பிவருகையில் வழியில் மதுரைக்குச் சென்ற போது, அங்கே கோவலன் கொலையுண்ட செய்தியும், கண்ணகி சிலம்பு ஏந்திச் சென்று வழக்குரைத்து வென்ற செய்தியும், அரசன் உயிர் நீத்த செய்தியும் கேட்டு, மதுரை நகர் அழிந்த காட்சியையும் நேரில் கண்டுவந்தான். காவிரிப்பூம்பட்டினத்திற்கு வந்ததும் கோவலனுடைய குடும்பத்தார்க்கும் மற்றவர்க்கும் இந்தச் செய்திகளைத் தெரிவித்தான். செய்திகேட்ட மாதவி அலமந்தாள் ; எல்லை காணாத் துயரக் கடலில் ஆழ்ந்தாள்.

## துறவு

மாதவியின் துயரம் வாழ்க்கையின் வெறுப்பாக மாறியது; கணிகையர்வாழ்க்கையே தன் தவற்றிற்கும் தனித் துயர்க்கும் காரணம் என்று தன் குலத்தொழிலை வெறுத்தாள். நகரில் அறவண அடிகள் என்ற பௌத்த துறவி ஒருவர் குணக்குன்றாய் அமைதியுருவாய் விளங்குவதை முன்னமே கேள்வியுற்றிருந்தமையால், அவரிடம் செல்ல எண்ணினாள். சென்று, அவருடைய அடிகளில் வீழ்ந்து வணங்கிக் கோவலனுக்கு உற்ற கடுந்துயரை எடுத்துரைத்தாள். பிறந்தவர் துன்புறுவர், பிறவார் இன்புறுவர், பற்றால் துன்பம் வரும், பற்றின்மையால் இன்பம் வரும் என்னும் உண்மைகளையும் உய்யும் வகைகளையும் அறவண அடிகள் எடுத்துரைத்தார் :

*மறவணம் நீத்த மாசறு கேள்வி*
*அறவண அடிகள் அடிமிசை வீழ்ந்து*
*மாபெருந் துன்பம் கொண்டுஉளம் மயங்கிக்*
*காதலன் உற்ற கடுந்துயர் கூறப்*
*பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்*
*பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்*
*பற்றின் வருவது முன்னது பின்னது*
*அற்றோர் உறுவது அறிகஎன்று அருளி*
*ஐவகைச் சீலத்து அமைதியும் காட்டி*
*உய்வகை இவைகொள்என்று உரவோன் அருளினன்.*

(மணிமேகலை. ஊரலர். 60-69)

அறவண அடிகளின் அறவுரை கேட்ட மாதவி, மகள் மணிமேகலையோடு அவரிடம் அடைக்கலம் புகுந்தாள். போதிமாதவர்முன் செய்யத் தக்க புண்ணியதானம் செய்து, கூந்தலைக் களைந்து, துறவி ஆனாள்.

மணிமேகலை அப்போது உற்ற பருவம் அடைந்து அழகுருவாக விளங்கினாள். மாதவியின் தாய் சித்திராபதி மணிமேகலையையாவது இனிக் கணிகையர்குல முறைப்படி ஆடல் பாடல் கலைகளுக்கு உரியவளாகச் செய்து சிறப்பிக்க வேண்டும் என்று முயன்றாள். "என் தாயின் விருப்பம் போல் மணிமேகலை நடக்க விடமாட்டேன். துயரம் நிறைந்த அந்தக் கணிகையர்கோலம் மணிமேகலையை அணுகாமல் ஒழிய வேண்டும்" என்று துணிந்து, அவளுடைய கூந்தலையும் களைந்து துறவியாக்கினாள்.

துணிவு

கணிகையரின் கலைவாழ்வு நாட்டிற்கு இன்றியமையாதது என்று எண்ணிய நகர மக்கள் பலவாறு வருந்தினர். வசந்தமாலை மாதவியின் துறவுக் கோலத்தையும் வாடிய மேனியையும் கண்டு மிக வருந்தினாள். சித்திராபதியின் ஏவலின்படி, வசந்தமாலை, மாதவியும் மணிமேகலையும் இருந்த மண்டபத்தை அடைந்து, மாதவியின் வாடிய உடலைக் கண்டு வருந்தி, "கலைகளைக் கற்றுத் தேர்ந்த மாதவி இவ்வாறு தவம் புரிவது நாணத் தக்கது என்று ஊரில் சான்றோரும் மற்றோரும் கூடிப் பேசிப் பழிக்கிறார்கள்" என்றாள். அதைக் கேட்ட மாதவி, "காதலன் உற்ற கடுந்துயரைக் கேட்டும் உயிர்துறக்காமல், ஊரார் பழிச்சொல்லுக்கு ஆளாகி, நாணம் துறந்து உயிர் வாழ்கிறேன். காதலர் இறந்தால் உள்ளம் கொதித்து உயிர் துறப்பர். உயிர் துறக்காதவர், தீ வளர்த்துப் பாய்ந்து மாய்வர். தீப்புகுந்து மாயாதவர், மறுமையில் உடன் வாழ்வதற்காக நோற்பர் பத்தினிப் பெண்டிர் இவ்வாறெல்லாம் செய்வது உலக வழக்கம். எம் கண்ணகி இவ்வாறெல்லாம் செய்யவில்லை. கணவனின் கடுந்துயரைப் பொறுக்காமல், கூந்தல் விரித்து அரற்றிக் கலங்கி, மதுரைநகரம் நெருப்புக்கு இரையாகுமாறு செய்த மாபெரும் பத்தினியாக விளங்கி

ளுள். அத்தகைய மாபெரும் பத்தினி கண்ணகியின் மகள் மணிமேகலை. அவளைத் தவநெறியில் சேர்த்தலே தக்கது. அறமற்ற கணிகையரின் வாழ்க்கையில் தீய தொழிலை மேற் கொண்டு அவள் வாழ மாட்டாள். நீ இதை என் தாய்க் கும் சுற்றத்தார்க்கும் சென்று செப்பு" என்ருள். பெறற் கரிய மாணிக்கத்தைக் கடலில் இழந்தாற் போன்று வசந்த மாலை கலங்கிய நெஞ்சத்தோடு சோர்ந்து திரும்பிளுள். அரசனும் நகரமக்களும் அவ்வாறே வருந்தினர்:

ஆங்கது கேட்ட அரசனும் நகரமும்
ஓங்கிய நன்மணி உறுகடல் வீழ்த்தோர்
தம்மின் துன்பம் தாம்நனி எய்த...

(சிலப். வரந்தரு. 29-31)

மைத்தடங் கண்ணர் தமக்கும்எற் பயந்த
சித்திரா பதிக்கும் செப்பு நீஎன
ஆங்கவள் உரைகேட்டு அரும்பெறல் மாமணி
ஓங்குதிரைப் பெருங்கடல் வீழ்த்தோர் போன்று
மையல் நெஞ்சமொடு வயந்த மாலையும்
கையற்றுப் பெயர்ந்தனள் காரிகை திறத்தென்.

(மணிமேகலை. ஊரலர். 70-75)

# பண்புநலன்

## ஆராய்ச்சி முறை

தமிழிலக்கியத்தில் பண்புநலன் ஆராய்ச்சி என்பது புதிய துறையாகும். நல்லவரை மிக நல்லவராகக் காட்டுதலும். தீயவரை மிகத் தீயவராகக் காட்டுதலும் இலக்கியத்தின் மரபாக இருந்திருக்கின்றன. இந்நிலையில், நல்லவரிடத்திலும் குறை சில உண்டு என்றோ, தீயவரிடத்திலும் குணம் சில உண்டு என்றோ காட்ட வழி இல்லை. இலக்கிய ஆசிரியர் அவ்வாறு இரண்டோரிடம் அமைத்திருப்பினும், இலக்கியத்தைக் கற்பவர் அப்பகுதிகளைக் காணும்போது கண்ணை மூடிக்கொள்வர்; அல்லது கண் திறந்து கற்பினும், வேறு பொருள் கூறி மரபைக் காத்திட முனைவர் ; இதுவே வழக்கமாகும். அதனால், 'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்' என்ற ஆராய்ச்சிக்கே இடம் இல்லை. நல்லவர் எனின் எல்லாம் குணமே எனக் கொள்ளுதல், தீயவர் எனின் எல்லாம் குற்றமே எனக் கொள்ளுதல்—இவ்வாறு இலக்கியத்தில் வருவோரை உணர்ந்துவருதலால், குணம் குற்றம் இரண்டையும் ஒருவரிடத்தில் நாடுவதில்லை. வடதுருவம், அல்லது தென்துருவம், இந்த எல்லை அல்லது அந்த எல்லை என்பது வாழ்க்கைக்குப் பொருந்தாது. உண்மை என்பது எப்போதும் இந்த முனையிலும் இல்லை, அந்த முனையிலும் இல்லை ; நடுநிலையில்தான் இருப்பது. வாழ்க்கை இவ்வாறு இருக்குமாயின், இலக்கியம் என்பது வாழ்க்கையின் கண்ணுடியாக இருப்பதும் உண்மையாயின், இலக்கியத்தில் வரும் தலைவன் தலைவியரிடத்திலும் இத்தகைய ஆராய்ச்சியே செய்தல்

வேண்டும். குணமே உடையவரும் குற்றமே உடையவரும் வாழ்க்கையில் இல்லாதது போலவே, இலக்கியத்திலும் இருப்பதில்லை. பெரும்புலவரின் காவியங்கள் இவ்வாறே அமைத்துக் காட்டுகின்றன. அவைகளே வாழ்க்கைக்குப் பயன்படும் கலைச் செல்வங்கள் ஆகும். சிலப்பதிகாரம் அத்தகைய தமிழ்ச் செல்வ மணிகளுள் ஒன்று. அதில் வரும் கோவலன், கண்ணகி, மாதவி ஆகியோர் உலகில் பிறந்து வாழ்ந்த பெருமக்கள். கலைமெருகு என்னும் புனைந்துரை ஓரளவு கூடியிருப்பினும், அவர்கள் வாழ்க்கையிலிருந்து எட்டி நோக்கக்கூடிய மக்களாகவே விளங்குகின்றனர். குணமே உறைந்துள்ள வடதுருவத்திலோ, குற்றமே அடர்ந்துள்ள தென் துருவத்திலோ வாழும் விந்தை மக்களாக அவர்கள் இல்லை. தட்பமும் வெப்பமும் இயைந்துள்ள தமிழகத்தின் மக்கள்போல் அவர்கள் இலக்கியத்தில் குணமும் குற்றமும் கலந்துள்ள சூழலில் விளங்குகின்றனர். ஆதலின் அவர்கள், குணம் நாடிக் குற்றமும் நாடக் கூடியவாறு இலக்கிய ஆராய்ச்சிக்கு எட்டியவர்களாக உள்ளனர்.

மற்ற இலக்கியங்களிலும், இந்த ஆராய்ச்சிக்கு வாய்ப்புக் குறைந்திருப்பினும், தலைவன் தலைவி முதலானவர்களின் குணமும் குற்றமும் நாடி மிகைநாடுவதே நல்ல முறையாகும். இவ்வாறு ஆராய்வதால், சொற்பொருளும் சொல் நயமும் காணும் சிறுபயனோடு, புலவரின் உள்ளமும் வாழ்க்கையின் உண்மையும் கண்டு தெளியும் பெரும் பயனும் பெறக் கூடும்; இலக்கியக் கல்வியும் முழுமையுறும்.

இத்தகைய ஆராய்ச்சி இல்லாத காரணத்தால் பழிப்புக்கும் வெறுப்புக்கும் ஆளான காவிய உறுப்பினரில் மாதவி ஒருத்தி. சிலப்பதிகாரக் கதையைக் கற்றறிந்தவர் மாதவியை வெறுக்கின்றனர்; கதையைக் கேட்டறிந்த பொதுமக்கள் மாதவியைப் பழிக்கின்றனர். பண்புநலன் ஆராயும் இலக்கியமுறை இருந்திருப்பின், இந்த வெறுப்பும்

பழிப்பும் காரணம் அற்றவை என்பது எளிதில் புலனாகி யிருக்கும்; மாதவியின் குணமும் விளங்கி, குற்றமும் விளங்கி, மிக்கதாகிய குணச் சிறப்பும் விளங்கியிருக்கும்.

ஆங்கில இலக்கியத்தில் இத்தகைய பண்புநலன் ஆராய்ச்சி பெருகிப் பண்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, ஷேக்ஸ்பியர் என்னும் பெரும்புலவர் எழுதிய 'ஹாம்லெத்' என்ற நாடகத்துள் வரும் ஹாம்லெத் என்னும் இளவரசனைப் பற்றிய ஆராய்ச்சியைக் குறிப்பிடலாம். நாடகத் தலைவனான அந்த இளவரசனைப் பற்றி ஆங்கில அறிஞர் பற்பலர் பலவகைக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். கோல்ரிட்ஜ் (Coleridge) என்னும் சிறந்த எழுத்தாளர். "ஹாம்லெத் அஞ்சாமை உள்ளவன்; சாவைப் பற்றிக் கவலைப்படாதவன்; ஆயின் அவன் நுண்ணுணர்வால் தடுமாறுகிறான்; எண்ணுந்திறனால் தயங்குகிறான்; துணியுமாற்றலால் செயல்திறனை இழக்கிறான்...அவன் தளைப் பிணிப்பையே விடுதலை என்று மயங்குகிறான். செயல் பயன்படாமல் போகும் நிலைமை வரும்வரையில் செயலாற்றாமல் காலந் தாழ்க்கிறான்; சூழ்நிலைக்கும் எதிர்பாரா நிகழ்ச்சிக்குமே இரையாகிச் சாகிறான்" (Hamlet is brave and careless of death; but he vacillates from sensibility, and procrastinates from thought, and loses the power of action in the energy of resolve... He mistakes the seeing his chains for the breaking of them; delays action till action is of no use; and dies the victim of mere circumstances and accident) என்கிறார். "ஹாம்லெத்திற்குத் தன்னிடத்திலாவது பிறிதொன்றிலாவது உறுதியான நம்பிக்கை இல்லை" (Hamlet has no firm belief either in himself or in anything else) என்கிறார் அறிஞர் ஷ்லெகெல் என்பவர். கதே

(Goethe) என்னும் புலவரோ, “ செயலுக்கு உரிய தகுதியற்ற ஓர் உயிரின்மீது பெருஞ்செயலின் பொறுப்பு ஒன்று ஏற்பட்டால் அதன் விளைவு என்ன ஆகும் என்பதை உணர்த்துவதே இந்த நாடகத்தில் ஷேக்ஸ்பியரின் நோக்கம் என்று தெளிகிறேன் ” (To me it is clear that Shakespeare meant, in the present case, to represent the effects of a great action laid upon a soul unfit for the performance of it) என்கிறார். “நாமே ஹாம்லெத்” (It is we who are Hamlet) என்கிறார் அறிஞர் ஹாஸ்லிட் (Hazlitt). “ தனித்துள்ளபோது உறுதியற்று மெலிந்தவனாகவும், பிறருடன் போராட நேர்ந்தபோது உரமுடையவனாகவும் உள்ளான் ” (Weak when he is alone, but strong when confronted with others) என்கிறார் சேப்மேன் (J. A. Chapman) என்பவர்.

“கற்பனை இலக்கியங்களில் வருவோர் எல்லோருள்ளும் ஹாம்லெத்தே மிகக் கவர்ச்சியுள்ள, அளந்தறிய முடியாத அருமைப்பாடு மிகுந்த காவிய உறுப்பினன் ” (Hamlet is the most fascinating character and the most inexhaustible in all imaginative literature) என்று அறிஞர் பிராட்லே (A. C. Bradley) ஆராய்ந்து கூறுகிறார்.

இவ்வாறு அந்த ஒரு நாடகத்தில் வரும் இளவரசனைப் பற்றி எண்ணி எண்ணி ஆராய்ந்து தெரிவித்த அறிஞரின் கருத்துக்கள் எண்ணிலவாய்ப் பெருகியுள்ளன. அவற்றைக் கற்பதால், பற்பல ஐயங்கள் எழுந்து படிப்படியே தீர்ந்து தெளிவும் விளக்கமும் பெற முடிகிறது. அவ்வாறே கோவலன், கண்ணகி, மாதவி போன்றவர்களின் பண்பு நலன் ஆராய்ச்சியும் தமிழில் பெருகியிருந்தால், இன்று இலக்கியக்கல்வி எவ்வளவோ பண்பட்டு உயர்ந்திருக்கும். மாதவியைக் கண்மூடிப் பழிக்கும் பழிப்புரைகளும் பெருகாமல் போயிருக்கும்.

## ஆசிரியர் நடுநிலைமை

சிலப்பதிகாரம், வாழ்க்கைச் சிக்கல் மிகுந்த காவியம். இதை இளங்கோவடிகள் எழுதியது தமிழகத்தின் பெரும் பேறு என்றே கூற வேண்டும். உணர்ச்சி வயப்பட்டு ஒன்றைக் கண்டு மற்றொன்றை மறக்கும் தன்மையரான எளிய புலவர், குணம் நாடிக் குற்றமும் நாடிச் சீர்தூக்கும் திறன் அறியாத புலவர் எவரேனும் கோவலன்கண்ணகி வாழ்க்கையை எழுதியிருப்பின்,பல உண்மைகள் விளங்காமல் மறைந்துபோயிருக்கும்; பல மாசுகள் புகுந்து படர்ந்திருக்கும்; கோவலன் ஒரு நிலை உற்றிருப்பான்; கண்ணகி வேறு ஒரு நிலை உற்றிருப்பாள்; மாதவியும் வேறு வடிவில் காணப்பட்டிருப்பாள். கண்ணகியையும் கோவலனையும் மிகச் சிறந்தோராக்கி, அவர்களின் சிறப்பு விளங்கும் பொருட்டு, மாதவியை மிக மிக இழிவுபடுத்தியிருப்பர். தூய வெண்மை விளங்கும்பொருட்டு, பின்னணியாகக் கருமை தீட்டுதல்போல்,கண்ணகியைப் புகழ்ந்துபோற்றும் நோக்கம்கொண்டு அதற்காகவே மாதவியைப் பலவாறு பழித்துத் தாழ்த்தியிருப்பர். இளங்கோவடிகளின் நடுநிலைமையும், வாழ்க்கையை உணர்ந்து தெளிந்த தெளிவும் மாதவியைக் காத்தன என்று கூறுமாறு இன்று சிலப்பதிகாரம் விளங்குகிறது. கண்ணகிக்கு அடுத்த நிலையில் பெண்ணணங்காய்க் கற்புச்சுடராய் மாதவியைக் காண முடிவதற்குக் காரணம் ஆசிரியர் இளங்கோவடிகளின் விழுமிய புலமையே ஆகும். திறன் அறியாத ஓவியக் கலைஞன், வெண்மையைக் காட்ட வேறொரு கருமையைத் தீட்டுவான். ஆயின், கலைத்திறன் மிக்க ஓவியப்புலவனோ, தூய வெண்ணிறத்திலேயே இருவகை அழகைக் காட்ட வல்லவன். கண்ணகியின் கற்புமேம்பாட்டை விளக்குவதற்காக இளங்கோவடிகள் மாதவியிடம் மாசு புகுத்தவில்லை. கண்ணகியின் கற்பு விளங்கும் விளக்கத்

திலேயே மாதவியின் கற்பும் கலந்து ஒளிருமாறு செய்துள்ள கலைத்திறன் நுண்ணிதின் உணர்ந்து வியக்கத் தக்கது. வாழ்க்கையை மிகைபடப் புனைந்தும் மாசுபடத் திரித்தும் கலையாக்காமல், உள்ளதை எழில்பெற வடித்துக் கலைச்செல்வமாக்கும் உண்மைப்புலமை இதுவே ஆகும்.

இளங்கோவடிகள் சேரவேந்தனுடைய தம்பியார்; ஆயினும் அவருடைய பற்றற்ற பரந்த நோக்கு மற்ற இருவேந்தரின் புகழையும் பரப்பச் செய்தது; தம் தமையன் சேரனுக்கு நிகராகவே பாண்டியனையும் சோழனையும் போற்றிப் பாராட்டும் பெருந்தகைமை அவர்க்கு இயல்பாக அமைந்திருந்தது.

> முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது
> அடிகள் நீரே அருளுக (பதிகம். 61-62)

என்று சாத்தனார் கூறுமாறு மூவேந்தர்க்கும் உரிய பொதுத் தன்மை பெற்ற காவியத்தை நடுநிலையில் நின்று இயற்றிய பெருமை இளங்கோவடிகளுக்கு அமைந்தது. புகார்க் காண்டத்தில் சோழநாட்டைப் புகழ்ந்து, மதுரைக்காண்டத்தில் பாண்டியநாட்டைப் பாராட்டி, வஞ்சிக்காண்டத்தில் தாம் பிறந்துவளர்ந்த சேரநாட்டையும் அவற்றிற்கு ஒத்தவகையில் போற்றியுள்ளார் இளங்கோவடிகள். மற்ற இருநாடுகளையும்விடச் சேரநாட்டில் அவருக்குத் தனிப் பற்று இருந்தது எனக் காட்டுவதற்கு ஒரு குறிப்பும் இல்லை. சமயத்துறையில் இளங்கோவடிகளுக்கு இத்தகைய நடுநிலைமையே உயர்ந்த பண்பாக விளங்குவதை நூல் காட்டுகிறது. நூலில் பலவகைச் சமயங்களைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படினும், ஆசிரியர் எவற்றிலும் வெறுப்புக் கொள்ளாத பெருந்தன்மையோடு திகழ்கிறார். நாடோ சமயமோ எத்துறையிலும், ஒன்றிலே பற்றுக்கொண்டு மற்றவற்றில் குறை காண்பது எல்லோர்க்கும் எளிதில்

இயல்வது. பல்வற்றையும் நடுநிலையில் நின்று கண்டு கடமையைச் செய்வது,தெளிவும் திண்மையும் தூய்மையும் பெற்ற பேரறிஞர்க்கே இயல்வதாகும். இத்தகைய நல்லறிஞர் இயற்றிய காவியம் ஆகையால்தான்,மாதவியின்சொற்களையும் செயல்களையும் திரித்து மாசுபடுத்தாத உயர்நிலையைக் காண்கிறோம். இல்லையாகில்,கண்ணகியை வீரபத்தினியாக வழிபடும் எல்லை கண்டபின், மாதவியைக் கருதவும் தகாத இழிமகளாகத் திரித்துக்கூற நேர்ந்திருக்கும். ஏனெனில், ஒன்றை வானளாவப் புகழ்வதற்காக மற்றொன்றை மிகத் தாழ்த்திப் பேசுதலே உலக இயல்பு; குறைமதியினரின் இயல்பு. அறிவும் பண்பும் ஒருங்கே உருக்கொண்டாற் போன்ற சான்றோர் இளங்கோவடிகள் ஆகையால், கண்ணகியை வழிபடும் பான்மைக்காக மாதவியைப் பழிக்காத பெருந்தன்மை அமைந்திருக்கக் காண்கிறோம்.

**கலையின் பிணிப்பு**

கோவலனும் மாதவியும் ஒருவரை ஒருவர் விரும்பி வாழ்ந்த வாழ்வுக்கு முதல் காரணம் கலைதான். மாதவி ஆடல் பாடல் அழகு என்னும் மூன்று கலைகளையும் ஏழு ஆண்டுகள் பயின்று தேர்ந்தவள். சோழவேந்தன் போற்றிப் பரிசு நல்குமாறு கலைகளில் தேர்ச்சி பெற்று அரங்கேற்றத்தால் சிறப்பு எய்தியவள். அரங்கேற்றத்தின்போது கலையரசியாக விளங்கிய மாதவியின் ஆடல்பாடலைக் கண்டும் கேட்டும் மகிழ்வதற்கு அரசனோடு நகரத்துப் பெருங்குடி மக்களும் வந்திருந்தனர். காவிரிப்பூம்பட்டினத்தில் உயர்ந்தோங்கு செல்வத்தான் என்று புகழ் பெற்று அரசறிய வாழ்ந்தவன் மாசாத்துவான்; ஆகையால் அத்தகைய பெருஞ்செல்வன் மகன் கோவலனும் சென்றிருந்து அரங்கேற்றத்தினைக் கண்டு மாதவியின் ஆடல் பாடல் அழகுகளைப் போற்றினான். வேந்தன் மகிழ்ந்து அளித்த பச்சை மாலையையும் தலைக்கோல்பட்டத்தையும் ஆயிரத்தெட்டுக்

கழஞ்சு பொன்னையும் அரிய சிறப்பினையும் பாராட்டிய வனாக அங்கிருந்து வந்தான். அவ்வாறு மாதவியின் கலைத் திறத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்த காரணத்தால்தான், அதன்பிறகு கூனி நகரப் பெருந்தெருவில் மாலையுடன் நின்று, "இந்த மாலை வாங்குபவர்க்கு மாதவி உரியவள்" என்று விலை கூறியபோது,கோவலன் முன்சென்று குறித்த பொன்னைக் கொடுத்து மாதவியின் அன்புக்கு உரியவன் ஆனான். இவ்வாறு கோவலன் மாதவியை நாடி வாழ்வ தற்கு முதல் காரணமாக இருந்தது கலையே ஆகும்.

கோவலனுடைய உள்ளத்தைக் கவர்ந்தது ஆடல் கலையா, பாடல்கலையா, அழகுக்கலையா, மூன்றுமா என் பதை ஆராய்வதற்குப் போதிய சான்றுகள் இல்லை.

> ஆடலும் கோலமும் அணியும் கடைக்கொள
> ஊடற் கோலமோடு இருந்தோன்
>
> (சிலப். கடலாடு. 74 - 75)

என்று கூறப்படுவதால், இந்திர விழாவில் மாதவியின் ஆடலையும் அதற்குரிய கோலத்தையும் அலங்காரத்தையும் கண்டு காலம் கழித்தான் என்றும் இறுதியில் வெறுப்புற் றிருந்தான் என்றும் அறிகிறோம். கடல்விளையாட்டுக் காணச் சென்றபோது, மாதவி தன் யாழைக் கோவல னுடைய கையில் கொடுத்திட, அவன் ஆற்றுவரியும் கானல் வரியும் பாடினான்:

> ஏவல் அன்பின் பாணி யாதுஎனக்
> கோவலன் கையாழ் நீட்ட அவனும்
> காவிரியை நோக்கினவும் கடற்கானல் வரிப்பாணியும்
> மாதவிதன் மனம்மகிழ வாசித்தல் தொடங்குமன்
>
> (சிலப். கானல். 1.)

என்றதனால், மாதவியின் மனம் மகிழுமாறு பாடத்தொடங் கினான் என்று தெரிகிறது. ஏழு ஆண்டுகள் அதைக்

கலையாகப் பயின்றவள் மாதவி. அவள் மனம் மகிழுமாறு கோவலன் பாடினான் என்பதால், அவனுடைய யாழிசைக்கும் திறன் எத்தகையது என்பது விளங்குகிறது. பல ஆண்டுகள் அல்லாமற்போயினும் சில ஆண்டுகளேனும் அவனும் இசைக்கலை பயின்றிருக்கவேண்டும்; இசைக் கலையில் ஆர்வமும் உடையவனாக இருந்திருக்கவேண்டும். ஆகவே, பாடல்கலை அவனுடைய உள்ளம் கவர்ந்த கலை என்று அறியலாம். அதனால்தான் மதுரைக்குச் செல்லும் வழியில் ஒரு சிற்றூரில் தங்கியிருந்தபோது கொற்றவையைப் போற்றிப் பாடிக்கொண்டிருந்த பாணரோடு தானும் கலந்து யாழிசைத்துப் பாடினான் :

ஆடியல் கொள்கை அந்தரி கோலம்
பாடும் பாணரிற் பாங்குறச் சேர்ந்து
செந்திறம் புரிந்த செங்கோட் டியாழின்
தந்திரி கரத்தோடு திவவுறுத்து யாஅத்து...
பாடற் பாணி அளைஇ...

(சிலப். புறஞ்சேரி. 104-113)

வீட்டையும் நகரையும் பிரிந்து வறுமைக் கவலையால் வாடி அருமைத் துணைவியையும் வருந்தச் செய்து வழி நடந்து வந்தபோது, பாணர் கூட்டத்தைக் கண்டதும் அவர்களோடு தானும் கலந்து யாழிசைத்துப் பாடும் அவ்வளவிற்கு அவனுள்ளம் இசைக்கலையில் ஈடுபட்டிருந்தது என்பதை இதனால் அறியலாம்.

மாதவி, அழகையும் ஒரு கலையாகக்கொண்டு பயின்றவள். இளங்கோவடிகள் மாதவியின் ஆடல்கலையையும் பாடல்கலையையும் அரங்கேற்றுகாதையுள் மிக விளக்கமாகக் கூறுகிறார். இந்திரவிழாவில் ஆடிய ஆடல்வகைகளைக் கடலாடுகாதையில் விளக்குகிறார். மாதவியின் யாழ்பயிலும் திறத்தையும் பாட்டிசைக்கும் திறத்தையும் கானல்வரியில்

எடுத்துரைக்கிறார். அலங்கரித்துக்கொள்வதையும் ஒரு கலையாகப் பயின்றவள் என்பதைக் கடலாடுகாதையில் பல அடிகளால் விளக்குகிறார். இவ்வாறு அழகைக் கலையாகக் கற்றுத் தேர்ந்த மாதவியுடன் வாழ்ந்த கோவலன், அதிலும் ஓரளவு ஈடுபட்டிருத்தல் வேண்டும். மாதவி அனுப்பிய இரண்டாம் திருமுகத்தைக் கோசிகன் கொடுத்த போது, அவன் மாதவியை வெறுத்துக் கண்ணகிக்காக வருந்தி வழிநடந்து நொந்த நிலையில் இருந்தான். இருந்த போதிலும் அந்தத் திருமுகத்தில் இட்ட முத்திரையில் மாதவியின் கூந்தலின் மணம் கமழ்தலை உணர்ந்தான்; அந்த மணம் மாதவியோடு உடனிருந்த காலத்தில் பூசிய நெய்யின் மணமாக இருந்ததை உணர்ந்து, அதைக் கைவிட முடியாதவனாய் நின்றான்:

**மாதவி ஓலை மலர்க்கையின் நீட்ட**
**உடனுறை காலத்து உரைத்தநெய் வாசம்**
**குறுநெறிக் கூந்தல் மண்பொறி உணர்த்திக்**
**காட்டியது ஆதலின் கைவிட லீயான்**

(சிறப். புறஞ்சேரி. 82 - 85)

என்பதால், மாதவியின் அலங்கார வகைகளை நுட்பமாக உணர்ந்த நுண்புலனுணர்வு கோவலனுக்கு இருந்தது என்று அறியலாம்.

ஆயினும் கோவலனுடைய உள்ளத்தை முதலில் கவர்ந்தது எது என்பதும், முதன்மையாகக் கவர்ந்தது எது என்பதும் விளங்கவில்லை. கூனி மாலை ஏந்தி விலைகூறி நிற்றலும், கோவலன் அதை வாங்கிக்கொண்டு மாதவியின் வீட்டிற்குச் சென்று 'விடுதல் அறியா விருப்பம்' கொள்ளுதலுமே சிலப்பதிகாரத்தால் அறியப்படுவன.

மாதவிக்குக் கோவலன் அன்றுதான் அறிமுகம் ஆனான் என்று கொள்ள வேண்டும். அதற்குமுன் மாதவிக்குக் காதற்குறிப்பு இருந்ததாகக் கூறுவதற்கில்லை.

மாலை வாங்குநர் சாலும்நம் கொடிக்கு
(சிலப். அரங். 166)

“இந்த மாலையை இவ்வளவு பொன் கொடுத்து வாங்குவோர் நம் மாதவிக்குப் பொருத்தமானவர்” என்று மாதவியின் தாயும் மற்றவரும் எண்ணி விலைகூறியநிலைமை காணப்படுகிறது. ஆகையால் மாதவி சிறப்பாக ஒருவரிடத்தும் காதல் கொள்ளவில்லை என்றும், குடும்பத்தாரின் ஏற்பாட்டிற்கு இசைந்திருந்தாள் என்றும், விலை கொடுத்து மாலை வாங்கிவருவோனை வரவேற்பது கடமை என்று இருந்தாள் என்றும் அறியப்படும். பெற்றோர் பார்த்துச் செய்யும் திருமணம் போன்றதாய்த் தொடங்கியதே மாதவியின் வாழ்க்கை என்று அறியப்படும். கோவலன் மட்டுமே விரும்பித்தேர்ந்து சென்றான் என்றும், மாதவியோ குடும்பத்தாரின் ஏற்பாட்டுக்கு இசைந்து இருந்தாள் என்றும் கொள்ள வேண்டும்.

## ஊடல் உரிமை

பெற்றோர் பார்த்துத் திருமணம் செய்விக்கும் வாழ்க்கைகளில் சில காதல்வாழ்க்கையாக வளர்வது உண்டு. அவை போல் கோவலனுடன் மாதவி தொடங்கிய வாழ்க்கையும் காதல்வாழ்க்கையாக அமைந்தது.

அவர்களின் வாழ்க்கை காதல் வாழ்க்கையே என்பதற்கு நல்ல சான்றாக இருப்பது ஊடல்உரிமையே ஆகும். காதல் என்பது உரிமை உள்ள வாழ்விலேயே மலர்வது. ஆளும் முறையும் அடிமை முறையும் உள்ள வாழ்வில் காதலுக்கு இடம் இல்லை. காதல் வாழ்க்கையை அன்பின் ஐந்திணையாக வகுத்து, மற்ற வாழ்க்கைகளைக் கைக்கிளை என்றும் பெருந்திணை என்றும் குறித்தனர் தமிழ்ச்சான்றோர். அடிமைகளும் ஏவலாளரும் அஞ்சியோ அடங்கியோ வாழும் வாழ்க்கை

அன்பின் ஐந்திணையுள் அடங்காது என்று நீக்கிக் கைக்கிளை பெருந்திணையுள் சேர்த்துள்ளார் தொல்காப்பியனார் :

**அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்**
**கடிவரை யிலபுறத்து என்மனார் புலவர்.**

(தொல் : பொருள். 23)

ஆதலின் காதலரின் வாழ்க்கையில் உரிமைமணம் கமழ்தலே காதலுக்கு அறிகுறியாகும். அந்த உரிமை ஆணுக்கும் வேண்டும், பெண்ணுக்கும் வேண்டும். வீட்டிற்கு வெளியே உலகக் கடமைகளில் ஆண் சிறந்து விளங்குவதால் ஆணின் உரிமை இயல்பாக விளங்குகிறது. பெண்ணின் உரிமை விளங்குவதற்கு வாய்ப்புத் தருவது வீடேயாகும். கணவனிடம் தவறு கண்டபோது ஊடுதல், தவறு காணாதபோதும் தவறு ஒன்றைக் கற்பனை செய்துகொண்டு விளையாட்டாக ஊடுதல் ஆக இருவகை ஊடலிலேயே பெண்ணின் உரிமை விளங்குவதாகும். அந்த உரிமையால் கணவனுடைய அன்பைப் பெற்று மனைவி மகிழ்வதற்கு இடம் ஏற்படுகிறது. மனைவியின் உரிமையை உணர்ந்து அன்பு செய்து மகிழ்வதற்குக் கணவனுக்கும் வாய்ப்பு உண்டாகிறது.

ஊடலின் சிறப்பையும் இன்றியமையாமையையும் திருவள்ளுவர் தெளிவாக எடுத்துரைக்கிறார். "கணவரிடம் தவறு ஒன்றும் இல்லையாயினும், ஊடுதல் அவருடைய அன்பைப் பெற்றுத்தர வல்லதாகும்; ஊடல் என்பது உணவிற்கு உப்பு அமைவதைப் போன்றது; சிறிய ஊடலும் முதிர்ந்த ஊடலும் இல்லையானால் காமம் அளிந்து பழுத்த பழமும் நன்கு அமையாத காயும் போன்றது; நிலத்தோடு நீர் இயைந்து கலப்பது போன்ற அன்புடையவரிடத்தில் ஊடுவதைவிட இன்பம் மிகுந்த தேவருலகு உண்டோ? உணவு உண்பதைவிட உண்ட உணவு செரிப்பது இனியது; காமத்தால் கூடி மகிழ்வதைவிட ஊடுதல் இனியது. ஊடுதல் காமத்திற்கு இன்பம் தருவது; அந்த ஊடலுக்கு

இன்பம், ஊடல் தணிந்து கூடுதலே ஆகும்.'' இவ்வாறு ஊடலைக் குறித்து அவர் கூறும் கருத்துக்களை இங்குக் கருத வேண்டும் :

இல்லை தவறுஅவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர்அளிக்கு மாறு. (குறள் 1321)

உப்புஅமைந் தற்றால் புலவி ; அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல். (ஷை 1302)

துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று. (ஷை 1306)

புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீர்இயைந் தன்னா ரகத்து. (ஷை 1323)

உணலினும் உண்டது அறல்இனிது ; காமம்
புணர்தலின் ஊடல் இனிது. (ஷை 1326)

ஊடுதல் காமத்திற்கு இன்பம் ; அதற்குஇன்பம்
கூடி முயங்கப் பெறின். (ஷை 1330)

ஊடி மகிழும் வாழ்வே உரிமையுள்ள காதலரின் வாழ்க்கை ஆகும். சங்க காலத்து அகப்பொருட் பாடல்களில் ஊடல்துறை அமைந்த மருதத்திணைப் பாடல்கள் பல அமைந்துள்ளன. வாழ்க்கையில் ஊடலுக்கு உள்ள சிறப்பை உணர்ந்தே இலக்கியத்திலும் அதற்கு இடம் தந்தனர். அந்தப் பழங்காலப் பாடல்களில் தலைவனிடம் தலைவி ஊடுவதற்குக் காரணம் தலைவன் பரத்தையரின் உறவை நாடியதே என்று கூறப்படுகிறது. அவற்றில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே ஊடல் நிகழக் காண்கிறோமே தவிர, கணவனுக்கும் பரத்தைக்கும் இடையே ஊடல் காணப்படவில்லை. ஆனால் சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்கும் கோவலனுக்கும் இடையே ஊடல் நிகழ்ந்த

தாகக் கூறப்படவில்லை. அவர்களின் வாழ்க்கை ஊடலற்ற வாழ்க்கையாக இருந்தது. ஆயின் பரத்தையர்மரபில் பிறந்த மாதவிக்கும் கோவலனுக்கும் இடையே ஊடல் நிகழ்ந்துவந்தது. இந்த மாறுபாடு, சிலப்பதிகாரத்தில் கோவலனுடைய காதல்வாழ்க்கையில் நேர்ந்த இடர்ப்பாட்டிற்கு ஒரு காரணம் என்று கூறத்தக்கது. கோவலன் கண்ணகியிடம் சில ஆண்டுகளே வாழ்ந்ததற்கும், மாதவியிடம் பல ஆண்டுகள் வாழ்ந்தபோது கண்ணகியை மறந்ததற்கும் இதை ஒரு காரணமாகக் கூறல் வேண்டும்.

கலையிலும் இன்பவாழ்விலும் மயங்கிய கோவலனிடம் மாதவி ஊடினுள் என்பதாலேயே, அவள் அவனிடம் ஒரு பரத்தையாக வாழ்ந்திடவில்லை என்பதும், அவனைக் காதலனுகக் கருதியே வாழ்ந்தாள் என்பதும் தெளிவாகும்.

நிலவுப்பயன் கொள்ளும் நெடுநிலா முற்றத்துக்
கலவியும் புலவியும் காதலற்கு அளித்துஆங்கு
ஆர்வ நெஞ்சமொடு கோவலற்கு எதிரிக்
கோலம் கொண்ட மாதவி...

(சிலப். அந்தி. 31-34)

கூடலும் ஊடலும் கோவலற்கு அளித்துப்
பாடமை சேக்கைப் பள்ளியுள் இருந்தோள்

(சிலப். கடலாடு. 109-110)

கானல்வரிப் பாடல்கேட்ட மானெடுங்கண் மாதவியும்
மன்னும்ஓர் குறிப்புஉண்டுஇவன் தன்னிலை மயங்கினுன்எனக்
கலவியால் மகிழ்ந்தாள்போல் புலவியால் யாழ்வாங்கி

(சிலப். கானல். 24)

என்னும் பகுதிகள் மாதவி கோவலனுடன் ஊடல்கொண்டு மகிழ்வித்த காதல்வாழ்க்கையைத் திரும்பத் திரும்பக் கூறித் தெளிவுபடுத்துகின்றன.

இத்தகைய உரிமையின்பம் இருந்த வாழ்க்கை உண்மையான காதல்வாழ்க்கை என்பதில் ஐயம் இல்லை. காதல் வாழ்க்கையாக இருந்த காரணத்தால்தான், மாதவியின் பேரன்பு கோவலனை உடன்வாழுமாறு செய்துவிட்டது; குற்றமற்ற சிறப்புடைய மனைவியையும் வீட்டையும் மறந்து மாதவியின் வீட்டிலேயே மகிழ்ந்திருக்குமாறு செய்துவிட்டது.

*விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்*
*வடுநீங்கு சிறப்பின்தன் மனையகம் மறந்தென்*

(சிலப். அரங்கேற்று. 174-175)

என்ற அடிகளில் இளங்கோவடிகள் இந்த உண்மையைக் கூறுகிறார்.

மாதவியோடு வாழ்ந்த காவிரிப்பூம்பட்டினத்தில் கோவலன் கண்ணகியைப் பல ஆண்டுகள் பிரிந்திருந்தான். ஆனால் மாதவி இல்லாத மதுரையில் சிலம்பை விற்றுவரும் வரையில் கண்ணகியை விட்டுப் பிரியவும் மனம் இல்லாமல் கலங்கினான்; கண்ணகியின் தனிமையைக் கண்டு உள்ளம் வெதும்பிக் கண்ணீர் கலங்கினான்:

*சீறடிச் சிலம்பின் ஒன்றுகொண்டு யான்போய்*
*மாறி வருவன் மயங்காது ஒழிகெனக்*
*கருங்கயல் நெடுங்கண் காதலி தன்னை*
*ஒருங்குஉடன் தழீஇ உழையோர் இல்லா*
*ஒருதனி கண்டுதன் உள்ளகம் வெதும்பி*
*வருபனி கரந்த கண்ணன் ஆகி...*

(சிலப். கொலைக். 92-97)

மதுரையில் சில நாழிகை கண்ணகியை விட்டுப்பிரிந்து செல்லக் கலங்கிக் கண்ணீர்விட்ட அன்பு, கோவலனுக்குக் காவிரிப்பூம்பட்டினத்தில் மாறிவிட் டிருந்ததா? இல்லை.

கோவலனால் கண்ணகி ஒருநாளும் வெறுக்கப்படவில்லை என்பதை அவளுடைய தோழி தேவந்தி எடுத்துரைத்தாள். ஆதலின், அன்பு மாறாத கண்ணகியைக் கல்நெஞ்சுடன் விட்டுப் பிரிந்து மாதவியின் வீட்டில் அவன் வாழ்ந்தான் என்றால், அதற்குக் காரணம் மாதவி அவனிடம் செலுத்திய உரிமை மிக்க பேரன்பின் ஆற்றலே என்று அறியலாம். அத்தகைய உரிமை மிக்க அன்புவாழ்வு அவர்களுக்கு இடையே இருந்தது என்பதை மாதவியின் ஊடல் காட்டுகிறது.

**பிரிவின் துன்பம்**

அன்பான வாழ்க்கையில்தான் பிரிவு என்பது துன்பத்தை விளைக்கவல்லது. திருவள்ளுவர் கயவரின் நட்பைப் பற்றிக் கூறும்போது, "பேதையாரின் நட்பு மிக இனியது; ஏன் எனில், அது பிரியுங்காலத்தில் துன்பம் தருவதில்லை" என்கிறார்:

*பெரிதுஇனிது பேதையார் கேண்மை பிரிவின்கண்*
*பீழை தருவதொன்று இல்.* (குறள். 839)

நன்மக்களின் பிரிவோ இதற்கு மாறாகப் பெருந் துன்பத்தைத் தரவல்லது. காதலரின் வாழ்க்கைக்கும் இந்த உண்மை பொருந்தும். கானல்வரிப் பாட்டால் கோவலன் மனம் மாறி மாதவியை விட்டுப் பிரிந்து சென்றபோது, அவள் செயலற்று வருந்தினாள். வருந்திய நெஞ்சத்தோடு வண்டியினுள் புகுந்து வீட்டிற்குத் திரும்பினாள். வரும்போது வண்டியில் ஏறிவந்ததாகக் கூறியுள்ளார் இளங்கோவடிகள்:

*மான்அமர் நோக்கியும் வையகம் ஏறி.*
(சிலப். கடலாடு. 120)

கோவலனைப் பிரிந்து வருந்திய நெஞ்சத்தோடு திரும்பிச் சென்றபோது வண்டியில் ஏறிச் சென்றதாகக் கூறாமல், வண்டியினுள் புகுந்து வீட்டினுள் புகுந்தாள் என்கிறார் :

> கையற்ற நெஞ்சினளாய் வையத்தி னுள்புக்குக்
> காதலனுடன் அன்றியே மாதவிதன் மனைபுக்காள்.
>
> (சிலப். கானல். 52)

இதனால், கோவலனுடன் வந்தபோது மகிழ்ச்சியோடு விளங்கிவந்தாள் என்பதும், கோவலன் இல்லாமல் தனித்துச் சென்றபோது துயரத்தால் சோர்ந்து ஒடுங்கிச் சென்றாள் என்பதும் ஆசிரியர் தெளிவிக்கிறார். காதலரின் வாழ்க்கையில்தான் இத்தகைய பிரிவாற்றாமைத் துன்பம் உண்டு.

மேற்கூறியது, காதலரைப் பிரிந்த மகளிர்க்கு மனத்தளவில் நேரும் துயரம் பற்றியது. உள்ளத்துயரம் மட்டும் அன்றி, உடலளவில் நேரும் மெலிவும் நிற வேறுபாடும் உண்டு. துன்புற்று மெலிவதால் வரும் அந்த நிற வேறுபாட்டையே பசலை என இலக்கியம் கூறும். கணவனைப் பிரிந்த மகளிர் பசலையுற்று வருந்துவதாகத் தமிழிலக்கியம் அடிக்கடி எடுத்துரைக்கும். ஆயின் பொருள்நோக்கம் கொண்ட பரத்தையர் பசலையுற்றதாகக் கூறவில்லை.

"அதோ பார், நம் காதலர் செல்கிறார்; இதோ பார், என் மேனியில் பசலை பரவுகிறது. விளக்கின் மறைவைப் பார்த்துக் காத்திருக்கும் இருளைப் போல், கணவனுடைய பிரிவைப் பார்த்துப் பசலை காத்திருக்கிறது. என் சாயலையும் நாணத்தையும் காதலர் கொண்டார்; கைம்மாறாக எனக்கு நோயும் பசலையும் தந்து பிரிந்து சென்றார்." இவ்வாறு திருவள்ளுவரும் பசலையைப் பற்றிக் கூறுகிறார் :

உவக்காண்எம் காதலர் செல்வார் ; இவக்காண்என்
மேனி பசப்புஊர் வது. (குறள். 1185)

விளக்குஅற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்குஅற்றம் பார்க்கும் பசப்பு. (ஷை 1186)

சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையும் தந்து. (ஷை 1183)

பரணர் பாடிய ஒரு பாட்டில் காதலனுடைய பிரிவால் காதலி பசலையுறுவது உவமைவாயிலாக எடுத்துரைக்கப்படுகிறது. "ஊர்க்கேணியில் சேர்ந்துள்ள பாசி போன்றது பசலை. கேணியில் இறங்கி நீரைத் தொடும்போது அந்தப் பாசி விலகுகிறது; நீரை விட்டு வெளியேறியதும் பழையபடி அந்தப் பாசி ஒன்றுசேர்கிறது. அதுபோல், காதலர் உடனுள்ளபோ தெல்லாம் பசலை நீங்கி, அவர் பிரியும் போதெல்லாம் வந்து மேனியில் படர்கிறதே" என்கிருள் காதலி :

ஊருண் கேணி உண் துறை தொக்க
பாசி அற்றே பசலை ; காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்த லானே.

(குறுந்தொகை, 399)

காதலர்க்குப் பிரிவுக்காலத்தில் வருவதாகிய பசலையை, பல ஆண்டுகள் கணவனைப் பிரிந்து வருந்திய கண்ணகி உற்றதாக இளங்கோவடிகள் கூறவில்லை. ஆயின், கானல் வரிப் பாட்டைக் கேட்டுக் கோவலன் விட்டுப் பிரிந்த அன்றே மாதவி பசலை உற்றதாகக் கூறுகிருர். அன்று மாலையே மாதவி பசந்த மேனியோடு நினைந்து நினைந்து வருந்திஞள் என்கிருர் :

*பசந்த மேனியள் படர்உறு மாலை*
(சிலப். வேனில். 68)

கோவலன் மதுரைக்குச் சென்று உற்ற கொடுமையைக் கேட்டுப் பெருந்துயர் அடைந்தபோதும்,

*வசந்த மாலைவாய் மாதவி கேட்டுப்*
*பசந்த மேனியள் படர்நோய் உற்று*
*நெடுநிலை மாடத்து இடைநிலத்து ஆங்குஓர்*
*படைஅமை சேக்கைப் பள்ளியுள் வீழ்ந்ததும்*
(சிலப். புறஞ்சேரி. 67-70)

என்று துன்புற்று வருந்தியதாகக் கூறுகிறார். இவை களும் மாதவியின் வாழ்வு காதல்வாழ்வே என்பதற்குச் சான்றுகளாம்.

**காதல் நெஞ்சம்**

இனி, மாதவி தன் வாயாலேயே கூறும் மொழிகளைக் காண்போம்.

கோவலன் மனைவியோடு காவிரிப்பூம்பட்டினத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்ற செய்தியை மாதவி கேள்வி யுற்று வருந்திக் கோசிகனிடம் திருமுகம் எழுதிக்கொடுத்த போது, "கண்மணி போன்றவற்கு இதைக் காட்டுக" என்று சொல்லிக்கொடுத்தாள் :

*கண்மணி அனையாற்குக் காட்டுக என்றே*
*மண்ணுடை முடங்கல் மாதவி ஈத்ததும்*
(சிலப். புறஞ்சேரி. 75-76)

முதல்திருமுகத்திற்கு இசைந்து கோவலன் வீட்டிற்கு வராதிருந்தமை, திருமுகத்திற்கு மறுமொழியும் சொல்லி யனுப்பாமை, அதற்கு மாறாக வசந்தமாலையிடம் தன்னை ஆடல்மகள் என்று பழித்துக் கூறினமை இத்தனையும்

பொருட்படுத்தாமல் பழைய பேரன்பே கொண்டு மாதவி அவனுக்கு இரண்டாம் திருமுகம் எழுதினுள்; அது அவளுடைய உண்மைக்காதலைக் காட்டவல்லது. கோசிகனிடம் அதைக் கொடுத்தபோது, உருகிய நெஞ்சத்தோடு, "கண்மணி அனையாற்குக் காட்டுக" என்று அவள் கூறிய சொல், மாருக் காதலின் பெற்றியைப் புலப்படுத்துகிறது.

அறவண அடிகளிடம் அறவுரை கேட்டுத் துறவறம் பூண்ட பின்னும், கோவலனை நினைக்கும்போது ஒருமுறை மாதவியின் நெஞ்சில் துறவுநிலை மறைந்து, ஒரு காதலியின் அன்புநிலையே மேற்பட்டு நிற்கக் காண்கிறேம். வசந்தமாலையை நோக்கி, "என் காதலன் உற்ற கடுந்துயரைக் கேட்டவுடன் உயிர் துறக்காத கல்நெஞ்சோடு வாழ்ந்தேன். ஊராரின் பழிச்சொல்லுக்கும் ஆளாகி நாணம் துறந்தேன்" என்றுள்:

காதலன் உற்ற கடுந்துயர் கேட்டுப்
போதல் செய்யா உயிரொடு நின்றே
பொற்கொடி மூதூர்ப் பொருளுரை இழந்து
நற்றெடி நங்காய் நாணுத் துறந்தேன்.

(மணிமேகலை, ஊரலர். 38-41)

ஒருநெறியான மனம்

மாதவி கோவலனுடைய உண்மைக்காதலியாக இருந்த காரணத்தால்தான், வாழ்க்கையில் ஒருநெறி உடையவளாக உறுதியோடு வாழ்ந்தாள். கோவலன் மனம் இடையிடையே வெறுப்புற்றிருந்தது. இந்திரவிழாவின் முடிவில் ஆடலும் கோலமும் கண்டு கோவலன் மனம் வெறுத்திருந்தான். அப்போதும் மாதவி பழைய அன்போடு அவனுக்கு உண்மைத் துணைவியாக இருந்து அவனை மகிழ்வித்தாள். கானல்வரிப்பாட்டிலும் கோவலனுடைய பாடல்களில் காதல்குறிப்புக்களை உணர்ந்தபோதும், உரிமை கொண்டு ஊடத்தொடங்கினுள். அந்த ஊடலைத் தவறுபட

உணர்ந்து கோவலன் வெறுத்துச் சென்றபோதும், அவனை வெறுக்க மாதவி மனம் கொள்ளவில்லை; கலங்கினாள்; வருந்தினாள்; யாழிசையிலும் அமைதி காண முடியாதவள் ஆனாள். அன்புமொழி கலந்து காதல்திருமுகம் எழுதி அனுப்பினாள். அதையும் ஏற்காமல் கோவலன் பழித்துச் சொல்லியனுப்பியபோதும் மாதவியின் மனம் செம்மையி லிருந்து பிறழவில்லை. மேலும் வாடித் துயருற்றாள். கோவலன் ஊரைவிட்டுப் பிரிந்து சென்ற செய்தி அறிந்த போது சொல்லொணுத் துயருற்றுப் படுக்கையில் வீழ்ந்து கிடந்தாள். கோவலனுடைய வெறுப்பையும் பழிப்பையும் நன்கு அறிந்திருந்தும், அவனுடைய அன்பையே நாடி அலமந்தாள். தன் தவறு உணர்ந்து கசிந்து உருகினாள். இரண்டாம் திருமுகத்தில் தான் செய்த தவறு நினைந்து வருந்தும் உள்ளத்தோடு வேண்டினாள். அதற்கும் மறு மொழி அனுப்பக் கோவலன் மனம் கொள்ளாததைக் கண்டபிறகும் மாதவி அவனுடைய அன்பையே நினைந்து ஏங்கித் தவம் கிடந்தாள். கோவலன் கொலைக்களத்தில் வீழ்ந்த செய்தி அறிந்தபோது, அளப்பரிய துயர்க்கடலில் விழுந்து கரை காணாமல் கலங்கினாள். அவனுக்காக உயிர் துறக்கவும் எண்ணினாள். அறவண அடிகள் என்னும் பெரியோரின் அறவுரையே மாதவிக்கு அந்நிலையில் தவத் தின் கரையைக் காட்டித் தேற்றிக் காப்பாற்றியது.

மாதவி இவ்வாறு தொடக்கம் முதல் இறுதிவரையில் ஒருநெறியான மனம் வைத்துக் கோவலனுடைய வாழ்க் கைத் துணைவி எனக் காதல்கொண்டு வாழ்ந்து, இறுதியில் துறவறம் பூண்டாள்.

### கோவலன் மனம்

ஆயின், கோவலனிடம் இத்தகைய உறுதியும் நெறியும் காண முடியவில்லை. திட்பம்இழந்த நெஞ்சும் மாறி அலையும் செயலுமே கோவலனிடம் காணத் தக்கனவாக உள்ளன.

முதலாவதாக, சில ஆண்டுகள் கண்ணகியோடு அன்புடன் வாழ்ந்த வாழ்க்கையை ஒரு நொடியில் மறந்து மாதவியின் மாலையை விலைகொடுத்து வாங்கி அவளுடன் வாழ வந்துவிட்டான். அன்றே 'விடுதல் அறியா விருப்பம்' கொண்டுவிட்டான். அதுவரையில் அவன் கண்ணகியிடம் கொண்டிருந்த 'தீராக் காதல்' என்ன ஆனது என்று தெரியாமல் மறக்கப்பட்டது. தீராக் காதலுடன் கண்ணகியை நோக்கி அவன் பாராட்டிய 'உலவாக் கட்டுரை' என்ன ஆனதோ தெரியவில்லை.

**மாசறு பொன்னே வலம்புரி முத்தே**
**காசறு விரையே கரும்பே தேனே**
**அரும்பெறல் பாவாய் ஆருயிர் மருந்தே**
**பெருங்குடி வாணிகன் பெருமட மகளே**
**மலையிடைப் பிறவா மணியே என்கோ**
**அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ**
**யாழிடைப் பிறவா இசையே என்கோ**
**தாழிருங் கூந்தல் தையால் நின்னை**

(சிலப். மனையறம். 73-80)

என்று அவன் பாராட்டிய பல சொற்களும் ஒரு நொடியில் பொருளற்ற சொற்கள்போல் ஆயின. 'கதிர் ஒருங்கு இருந்த காட்சிபோல்' கோவலனும் கண்ணகியும் காதலனும் காதலியுமாய் விளங்கிய காட்சி அன்றே மாறிவிட்டது. அதன்பிறகு கோவலனும் மாதவியுமாக வாழ்ந்த காட்சி யாவது மாறுமல் இருத்தல் கூடாதா? பல ஆண்டுகள் வரையில் அந்தக் காட்சி நீடித்ததற்கு மாதவியின் நிலைத்த பேரன்பே காரணம் என்று கூற வேண்டுமே அல்லாமல், கோவலனுக்கு அந்தப் பெருமை உரியது என்று கூற இடம் இல்லை. கோவலனுடைய உள்ளத்தில் வெறுப்பு இடையே தலையெடுத்துவந்தது. மாதவியின் கலைமட்டும்

கவர்ந்த கவர்ச்சியாக இருந்திருப்பின், கோவலன் என்றைக்கோ வெறுத்து வெளியேறிவிட் டிருப்பான். ஆயின், அவளுடைய பேரன்பான காதலே அவனுடைய நிலைபெரு உள்ளத்தையும் நிலைநிறுத்திப் பல ஆண்டுகள் வரையில் தன்னிடம் வாழச் செய்தது; சிறு நிகழ்ச்சியால் அல்லது சிறு குறிப்பால் முழுதும் வெறுத்து மாறும் மனம் உடைய கோவலனைப் பல ஆண்டுகள் ஒருநெறியில் நிறுத்தி வாழச் செய்த பெருமை மாதவியையே சாரும்.

இவ்வாறு பல ஆண்டுகள் வாழ்ந்த வாழ்க்கையும் கடற்கரையில் ஓவியத்திரைகள் சூழ்ந்தஇருக்கையில் சிறிது நேரத்தில் மாறிவிட்டது. பல ஆண்டுகளாகக் கண்ட மாதவியின் பேரன்பை உடனே மாயப்பொய் என்று எண்ணிவிட்டான்; எண்ணியவுடனே வெறுத்து எழுந்து பிரிந்துவிட்டான். இளங்கோவடிகளின் நெஞ்சமும் அதைக் கூறும்போது வருந்துகிறது. பகலெல்லாம் மாதவியோடு இருந்தவன், பொழுதுபோன நிலையில் அந்த அழகியை உடன்வரச் சொல்லிப் புறப்படாமல் தனியே விட்டுவிட்டுச் சென்றான், சொல்லாமல் எழுந்துசென்றான் என்கிறார்:

**உவவுற்ற திங்கள் முகத்தாளைக்கவவுக்கைஞெகிழ்ந்தனனாய்ப்**
**பொழுதீங்குக் கழிந்தது ஆகலின்எழுதும்என் றுஉடன்எழாது**
**ஏவலாளர் உடன்சூழ்தரக் கோவலன்தான் போனபின்னர்.**

(சிலப். கானல். 52)

மாதவி அனுப்பிய காதல்திருமுகத்தையும் கல்நெஞ்சோடு மறுத்து, அவளை ஆடல்மகள் என்று பழித்துக் கூறினான்:

**ஆடல் மகளே ஆதலின் ஆயிழை**
**பாடுபெற் றனஅப் பைந்தொடி தனக்குஎன**

அணித்தோட்டுத் திருமுகத்து ஆயிழை எழுதிய
மணித்தோட்டுத் திருமுகம் மறுத்ததற்கு

(சிலப். வேனில். 109-112)

இவ்வாறு "விடுதல் அறியா விருப்பு" என்று முதலில் கொண்ட விருப்புஎல்லாம் சிறிதுநேரத்தில் வெறுப்பாகவே மாறியது. இருந்தால் வடதுருவம், இல்லையானால் தென் துருவம் என்று துருவங்களில் வாழும் மனநிலையை இது காட்டுகிறது; அமைதியாகக் கடமைகளைச் செய்து ஆற்றலுடன் வாழும் திறமையைக் காட்டவில்லை.

அந்த அளவிலும் நிற்காமல், கண்ணகியிடம்சென்றதும் அவளுடைய வாடிய மேனியைக் கண்டு, அவளிடம் மாதவியைப்பற்றிப் பழித்துக்கூறத் தொடங்கினான். இதுவரையில் கண்ணகி மாதவியைப் பழித்ததும் இல்லை, மாதவி கண்ணகியைப் பழித்ததும் இல்லை. கோவலன்தான் கண்ணகியிடம் சென்று மாதவியைச் 'சலம்புணர் கொள்கைச் சலதி' என்று பழித்தான்; வஞ்சமும் பொய்யும் உடையவள் என்று கூறினான். அன்றியும், பொருந்தாத மற்றொரு பழிச்சொல்லையும் கூறினான். மாதவியோடு வாழ்ந்து மகிழ்ந்த காரணத்தால் முன்னோரின் குன்று போன்ற செல்வம் தொலைந்துவிட்டதாகச் சொல்லி வருந்தினான்:

பாடமை சேக்கையுள் புக்குத்தன் பைந்தொடி
வாடிய மேனி வருத்தம்கண்டு யாவும்
சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடிக்
குலம்தரு வான்பொருட் குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுந் தரும்எனக்கு என்ன

(சிலப். கனாத்திறம். 67-71)

அந்த நிலையிலேனும் சில நாள் பொறுத்து எண்ணிப் பார்த்துக் கடமையைச் செய்ய முற்படவில்லை. உடனே

மதுரைக்குப் புறப்படத் துணிந்தான்; கண்ணகியையும் உடன்வருமாறு அழைத்தான். அன்று இரவே விடிவதற்கு முன் வீட்டை விட்டுப் புறப்பட்டுவிட்டான்.

மாதவியிடம் இவ்வளவு வெறுப்புக் கொண்டு, அவளுடன் வாழ்ந்த வாழ்வை நினைந்து நாணமும் உற்று, தன் நகரத்தை விட்டே புறப்பட்டுவந்தவன், அந்த வெறுப்பிலும் நிலைத்து நிற்கவில்லை. அவன் இயற்கையாகத் தீயவன் அல்லன்; ஆதலின், பிறகு தன் ஆத்திரச் செயலை நினைந்து வருந்தினான். கண்ணகியோடு காட்டுவழியில் வந்ததை நினைந்து பெருமூச்சு விட்டு விட்டுக் கலங்கித் துயருற்று வாடினான். மாதவியின் இரண்டாம் திருமுகம் அவளுடைய கூந்தலின் மணத்தை உணர்த்தியதை அறிந்தவுடன் அந்தத் திருமுகத்தை மறுக்க மனம் இல்லாதவன் ஆனான்; கைவிடமுடியாமல் நின்றான். அவன் உள்ளத்தில் மாதவியின்மேல் கொண்டிருந்த வெறுப்பு மாறிய நிலைமையை அது காட்டுகிறது. முதல் திருமுகத்தைக் கையில் வாங்க மறுத்தவன் இரண்டாம் திருமுகத்தை மறுக்காமல் வாங்கிப் படித்துச் செய்தி உணர்ந்தான்; உடனே, மாதவிமேல் தவறு இல்லை என்றும், தவறு எல்லாம் தனதே என்றும் உணர்ந்தான். "மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாள்" என்றும், "சலம்புணர் கொள்கைச் சலதி" என்றும் பழித்த மனப்பான்மை அப்போது அறவே மாறி விட்டது.

*தன்தீது இலள்எனத் தளர்ச்சி நீங்கி*
*என்தீது என்றே எய்தியது உணர்ந்து*

(சிலப். புறஞ்சேரி. 94–95)

வருந்தும் மனப்பான்மையே அப்போது வந்துற்றது. அன்றியும், மாதவியின் திருமுகத்தில் கண்ட சொல்லையும் பொருளையும் போற்றி,

எற்பயந் தோற்குஇம் மண்ணுடை முடங்க்ல்
பொற்புடைத் தாகப் பொருளுரை பொருந்தியது

(ஷை 96-97)

என்று அதைப் பொற்புடைய முடங்கல் என்று பாராட்டினுன்; அப்படியே தன் தந்தைக்குத் தான் அனுப்பிய திருமுகமாகக் கொடுத்து அனுப்பிவிட்டான்.

இவ்வாறு கோவலனுடைய வாழ்க்கை, தொடக்கத்திலிருந்து ஆய்ந்தோய்ந்து பார்க்காமல் உடனுக்குடன் விருப்பு வெறுப்புக்களுக்கு இரையாகி எளிதில் மாறி மாறி அலையும் அமைதியற்ற வாழ்க்கையாக இருக்கக் காண்கிரேம். சிலப்பதிகாரத்தில் தலைவனுடைய வீழ்ச்சிக்கு ஆராய்ச்சி முறையில் ஒரு காரணம் கூறுவதாயின், அதையே கூற வேண்டும். அதனுல்தான் சில ஆண்டுகள் கண்ணகியோடு வாழ்ந்த வாழ்க்கை ஒரு நாழிகையில் மாறியது; பல ஆண்டுகள் மாதவியோடு வாழ்ந்த வாழ்க்கையும் ஒரு நாழிகையில் மாறிவிட்டது. அதனுல்தான் கண்ணகியைப் பாராட்டி உலவாக் கட்டுரை கூறிய கோவலன்,மாதவியிடம் விடுதல் அறியா விருப்புக்கொண்ட கோவலன், மாதவியை மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாள் என வெறுத்த கோவலன், காட்டுவழியில் அறவோர்போல் ' தன் தீது இலள் ' என எண்ணி உணர்ந்து தளர்ச்சி நீங்கிய கோவலன், மதுரையில் மாதரிவீட்டில் கண்ணகியைச் சில நாழிகை பிரிந்து செல்ல முடியாமல் கண்ணீர் கலங்கி வருந்திய கோவலன் என வேறு வேறு ஆட்கள்போல் வேறு வேறு நிலையில் அங்கங்கே காணப்படுகிருன்.

இவ்வளவு உறுதியற்ற நெஞ்சினனுய கோவலனுடன் சில ஆண்டுகள் வாழ்ந்தாள் கண்ணகி; பல ஆண்டுகள் வாழ்ந்தாள் மாதவி. ஆதலின் இருவரும் பாராட்டத்தக்க பண்பு உடையவர்கள் எனக் கூறல் வேண்டும். இருவ

ருள்ளும் மாதவியே கோவலனுடைய கலையுள்ளத்திற்கும் விருந்து நல்கக்கூடியவள் ஆகையால், அவனுடைய துணைவி யாக வாழ்வதற்குக் கண்ணகியைவிடத் தகுதி மிகுந்தவள் என்றும் கூறலாம்.

**செல்வம் தொலைந்தது**

ஆயினும், மாதவியிடம் கூறத் தக்க குறை ஒன்று உள்ளது. அதுதான் கோவலனுடைய வருவாய்க்குத் தக்க செலவு செய்பவளாக, "தற்கொண்டான் வளத்தக்கா" ளாக வாழாத குறை. அதனால், கோவலனுடைய செல்வம் எல்லாம் தொலைவதற்குக் காரணமாக இருந்தாள் என்று கொள்ளக்கூடாது; அவளோடு கூடிவாழ்ந்த காரணத்தால் செல்வம் தொலைந்தது என்று கோவலன் ஒருமுறை உணர்ச்சி வயப்பட்டுக் கூறியதையும் உண்மை என்று கொள்ளலாகாது. கோவலன் வாணிகத்துறையில் ஈடு பட்டுச் செல்வத்தைப் பெருக்காமல், மாதவியோடு இருந்து உள்ள செல்வத்தைச் செலவழித்தான் ; இதைத் தடுத்துக் காத்திடாதது மாதவியின் குறை எனலாம். ஆயின்,

> சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடிக்
> குலம்தரு வான்பொருட் குன்றம் தொலைந்த
> இலம்பாடு நாணுத் தரும் எனக்கு
>
> (சிலப். கனத். 69–71)

என்று கோவலன் மாதவியைப் பழித்து, அவளுடன் வாழ்ந்த வாழ்வால் செல்வம் தொலைந்தது என்று வருந்திக் கூறியது உண்மையா என்று காண வேண்டும். பலவகை யால் ஆராய்ந்தாலும் அது பொருந்தாத மொழி என்றே தெரிகிறது.

முதலாவதாக, கோவலனிடத்தில் பேரன்பும் அவ னுடைய நல்வாழ்வில் ஆர்வமும்கொண்ட மாதவி அவ்வாறு செல்வத்தை அழிப்பதற்குக் காரணமாக இருந்தாள் என்று

கொள்ள முடியாது. கோவலனுக்காக மட்டும் அல்லாமல் அவனுடைய மனைவியாகிய கண்ணகிக்காகவும் வருந்தும் மனம் மாதவிக்கு இருந்தது. ''குலத்தில் பிறந்த மணியாகிய மனைவியோடு இரவில் புறப்பட்டுச் செல்வதற்குக் காரண மான என் குற்றம் யாதோ அறியேன்'' என்று எழுதி யனுப்பிய திருமுகத்தில் காதலனுடைய துன்பத்திற்காக வருந்தும் வருத்தம் தெரிகிறது; அதனோடு கண்ணகியின் துன்பத்தை நினைந்து வருந்தும் துன்பமும் தெரிகிறது. இத்தகைய நல்ல மனம் உடையவள் அவனை வறுமைப் படுத்தக் காரணமாக இருந்திருக்க முடியாது.

இரண்டாவதாக: முதலில் செல்வத்தைத் தொலைக்கக் காரணமாக இருந்து பிறகு மனம் மாறிய காரணத்தால் நினைந்து வருந்தியிருக்கலாம் என்று மாதவிமேல் குறை கூறுவதற்கும் இடம் இல்லை. மாதவியின் வீட்டிலிருந்த போது கோவலனே செல்வத்தை அழித்தவன்; கொடை பல கொடுத்துப் பல குடும்பத்தைக் காத்ததாகவும் அறச் செயல் பல புரிந்ததாகவும் மாடலன் ஒருமுறை கூறினான். அந்த அறச்செயல்களை மாடலனே காவிரிப்பூம்பட்டினத் தில் கண்டு அறிந்திருப்பதாகக் குறிப்பிட்டான்.

**இம்மைச் செய்தன யான்அறி நல்வினை.**

(சிலப். அடைக்கலம். 91)

என்று அவனே கோவலனிடம் எடுத்துக்கூறினான். மாத விக்கு மகள் பிறந்தபோது, கோவலன் தன் முன்னோருள் ஒருவனைக் காப்பாற்றிய தெய்வத்தை நினைந்து குழந்தைக்கு மணிமேகலை என அந்தத் தெய்வத்தின் பெயரையே இட் டான். அவ்வாறு பெயர்வைத்த நாளில் நடந்த சிறப்பை முன்னிட்டுக் கோவலன் மாதவியோடு இருந்து இரவலர்க் குப் பொன்மாரி வழங்கினான்:

**துன்பம் நீங்கித் துயர்க்கடல் ஒழிகஎன**
**விஞ்சையிற் பெயர்த்து விழுமம் தீர்த்த**

எம்குல தெய்வப் பெயர்ஈங்கு இடுகஎன
அணிமே கலையார் ஆயிரம் கணிகையர்
மணிமே கலைஎன வாழ்த்திய ஞான்று
மங்கல மடந்தை மாதவி தன்னொடு
செம்பொன் மாரி செங்கையின் பொழிய...

(ஷை 35-41)

கீரிப்பிள்ளையைக் கொன்ற ஓர் அந்தணன் மனைவியைக் காக்கும் பொருட்டுப் பொருள் கொடுத்து அவளுடைய கணவனையும் வருவித்து உடன்வாழச் செய்து பெரும் பொருள் உதவி புரிந்தான் :

தீத்திறம் புரிந்தோள் செய்துயர் நீங்கத்
தானம் செய்துஅவள் தன்துயர் நீங்கிக்
கானம் போன கணவனைக் கூட்டி
ஒல்காச் செல்வத்து உறுபொருள் கொடுத்து
நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ!

(ஷை 71–75)

பொய்ச்சான்று சொல்லி உயிர்த்தண்டனைக்கு ஆளாகி மாண்ட ஒருவனுடைய தாய்க்காக மனம் இரங்கி, அவளுக்கு மட்டும் அல்லாமல் அவனுடைய சுற்றத்தார்க்கும் தொடர்புள்ள மற்றவர்க்கும் வறுமை தீரப் பொருள் உதவி செய்து பல ஆண்டுகள் காப்பாற்றினான் :

அழிதரும் உள்ளத்து அவளொடும் போந்துஅவன்
சுற்றத் தோர்க்கும் தொடர்புறு கிளைகட்கும்
பற்றிய கிளைஞரின் பசிப்பிணி அறுத்துப்
பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்!

(ஷை 87-90)

இத்தகைய சிறந்த அறச்செயல்கள் பல செய்து பொருளை வாரி வழங்கியவன் கோவலன். இளங்கோவடி

களும் அவனுடைய கொடைத்திறத்தை நினைந்து, 'வான வண் கையன்' (மழைபோன்ற வண்மை மிக்க கையுடையவன்) எனக் குறிப்பிடுகிறார். ஆயின் செலவு செய்வதற்கு ஏற்பப் பொருள் ஈட்டமுயன்றவன் அல்லன். ஆதலின், உள்ள செல்வம் சிதையாமல் இருத்தல் முடியுமோ? அதற்காக மாதவியைப் பழித்தல் அறமோ?

மூன்றாவதாக: கோவலனுடைய செல்வத்தைச் சுரண்டும் பொருளாசை உடையவள் அல்லள் மாதவி. அவ்வாறு பொருளாசை இருந்திருப்பின், வெறுத்துப் பிரிந்த கோவலனை மீண்டும் நாடியிருக்கக் காரணம் இல்லை. தன் காதல் கடிதத்தைக் கோவலன் மறுத்துப் பழித்துச் சொல்லியனுப்பிய பின்பும்,

> மாலை வாரார் ஆயினும் மாணிழை
> காலை காண்குவம்...
>
> (சிலப். வேனில். 115-116)

என்று நம்பிக்கையோடு எதிர்பார்த்திருக்கக் காரணம் இல்லை; கையறு நெஞ்சத்தோடு வருந்தியிருக்கக் காரணம் இல்லை; நகரைவிட்டுச் சென்றான் என்ற செய்தி அறிந்த பிறகு தன் தவறு நினைந்து வருந்திக் கடிதம் எழுதியனுப்பக் காரணம் இல்லை; மதுரைநகரில் கொலைக்களப்பட்டான் என்று கேள்வியுற்றபோது உயிர் தாங்கமுடியாமல் துயரத்தால் அலைந்து வருந்தியிருக்கவும், செல்வத்தையும் செல்வ வாழ்வையும் விட்டுத் துறவு பூணவும் காரணம் இல்லை; பொருளாசை இருந்திருப்பின், அவன் நகரத்தை விட்டுப் புறப்பட்டதை அறிந்த பிறகாவது கவலை இல்லாமல் "அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்" மறந்துவிட்டிருக்கலாம். ஆயின், மாதவி அத்தகையவள் அல்லள். "இலம்பாடு நாணுத் தரும்" என்று கோவலன் கண்ணகியிடம் கூறியதுபோல், மாதவியிடம் கூறியிருப்பின், உள்ள அணிகலன்களை எல்லாம் எடுத்துக்கொடுக்கத் தயங்கி

யிருக்கமாட்டாள். அன்றியும், பொருளாசை உடையவர் செல்வம் எல்லாம் தமக்கே வரவேண்டும் என்று விரும்புவரே அல்லாமல், பிறர்க்குத் தானம் செய்வதைக் காணவும் பொறுக்கமாட்டார். மாதவியோ மணிமேகலைக்குப் பெயர்வைத்த நாளின் சிறப்பின்போது, கோவலனுடன் இருந்து இரவலர்க்குச் செம்பொன்மாரி வழங்கியதைக் கண்டு அதற்குத் துணையாக இருந்தாள். பொருளாசை இருந்திருப்பின், இவ்வாறு கோவலன் செய்த பல கொடைகளுக்குத் துணையாக இருந்திருக்க முடியாது.

ஆகவே, கோவலனை வறியவனுக்கிய குற்றம் மாதவியைச் சாராது. உண்மையாக மாதவியிடம் காணக்கூடிய குறை யாது எனின், கோவலனுடைய செயலுக்குத் துணையாக இருந்ததே ஆகும். கோவலன் வாணிகம் செய்து செல்வம் சேர்க்காமல், உள்ள செல்வத்தைச் சிதைக்க இடம் கொடுத்துத் தானும் ஆடம்பரமாக வாழ்ந்ததே மாதவியின் குறையாகும். வாழ்க்கைத்துணைக்குத் திருவள்ளுவர் கூறும் திறன் - 'தற்கொண்டான் வளத்தக்காள்' ஆகும் திறன் - மாதவியிடம் இல்லாமற்போனது குறையே ஆகும்.

மாதவி வாழ்ந்த காலத்தில் பொருளீட்டல் பற்றியும் செலவு செய்தல் பற்றியும் தமிழர்களின் கொள்கை மிகத் தெளிவாக இருந்தது. ஒவ்வொருவரும் அவரவர் முயற்சியால் பொருள்தேடிச் சேர்க்க வேண்டும்; சேர்த்த பொருளைப் பிறர்க்குப் பயன்படும் வகையில் செலவிடவேண்டும்; முன்னோர் தேடித்தந்த செல்வத்தைச் செலவு செய்து அழித்தல் கூடாது; இவை அக்காலத் தமிழர் கொள்கை:

**உள்ளது சிதைப்போர் உளர்எனப் படாஅர்**
**இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு**

(குறுந்தொகை, 283)

என்று பாலை பாடிய பெருங்கடுங்கோ என்னும் பழந்தமிழ்ப் புலவர் தெளிவுறுத்தியுள்ளார். அன்றியும், வட்டி

வாங்குதல் முதலிய வழிகள் அக்காலத்தமிழர் அறியாதவை ஆதலின், முன்னோரின் செல்வத்தை வைத்துக்கொண்டு ஒருவன் வாழ்க்கை நடத்தவோ, பிறர்க்கு உதவவோ வழி இல்லாமற் போயிற்று. இந்நிலையில், பெற்றோர் தந்த செல்வம் - குலம்தரு வான்பொருள் குன்றம் - தொலையுமாறு வாழ்ந்தான் கோவலன்; பல ஆண்டுகள் முயற்சி ஒன்றும் இன்றி மாதவியின் ஆடல்பாடல் அழகிலே திளைத்திருந்தான். இது அவனுடைய குறை ஆகும். இதற்கு இடம் தந்தது மாதவியின் குறை ஆகும்.

## இடித்துரைத்தல் இயலாமை

கோவலனுடைய செல்வம் சிதைந்துவருவது மாதவிக்கு ஓரளவாவது தெரியாமலிருந்திருக்கக் கூடும் என்று சொல்வதற்கில்லை. ஈட்டாமல் செலவுசெய்தல் செல்வத்திற்குச் சிதைவு என்பது அக்காலத்தினர் நன்கு அறிந்த உண்மை ஆகையால், மாதவி சிறிதும் அறியாமல் இருந்திருக்க முடியாது. ஆயின், அதை எடுத்துக்கூறி இடித்துரைத்தால் என்ன ஆகுமோ என்று அஞ்சிய அச்சம் மாதவிக்கு இருந்திருக்கலாம். முயற்சி இல்லாமல் வாளா இருத்தலை எடுத்துரைத்தால், கோவலன் மனம் மாறித் தன்னைத் துறத்தலும் கூடும் என்று மாதவி அஞ்சியிருக்கலாம். மாதவியின் பேரன்பு அத்தகைய அச்சத்திற்கு இடம் கொடுத்தல் இயல்பே; அவள் கணிகையாய், ஒருவனை மணந்து வாழ்க்கைத்துணையாக வாழும் தகுதி அற்றவளாய், பிறப்பாலேயே தடை செய்யப்பட்டிருந்த நிலைமையே அதற்குக் காரணம். எவ்வாறேனும் கோவலனைப் பிரியாமல் வாழ வேண்டும் என்பதே அவளுக்கு முதல்நோக்கமாக இருந்திருக்கும். கோவலனுடைய செல்வத்தைக் குறித்தோ மற்றவற்றைக் குறித்தோ கவலைப்படுவது அதன்பின்னரே வந்திருக்கும். வாழ்க்கைப் போராட்டம் கண்ணகிக்கு ஒரு வகையானது; மாதவிக்கு மற்றொரு வகையானது. அக்

காலத்துச் சமுதாய அமைப்பின் காரணத்தால் அவ்வாறு வாழ்க்கைப் போராட்டம் வேறுபட்டிருந்ததைக் காணின், மாதவியின்மேல் இரக்கமே தோன்றும். கண்ணகி கடிந் துரைக்க உரிமை பெற்றிருந்தாள் ; ஆயினும் கடிந்துரைக் காமல் பொறுத்துத் தவம் கிடந்தாள். மாதவிக்குக் கடிந் துரைக்கும் உரிமை இல்லை ; ஆயினும் கோவலனுடைய அன்பை நம்பி ஒரு குறிப்பிட்ட எல்லையுள் நின்று ஊடுதல் மேற்கொண்டு வாழ்ந்தாள் ; அதுவும் ஒருநாள் சிறிது எல்லை மீறிச் சென்றது. அதையும் பொறுக்காமல், ‘மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள்’ என்று அவளுடைய பிறப்பை நினைந்து அவளைப் பழித்து வெறுத்து அகன்றான் கோவலன். சிறிது எல்லை கடந்த அளவிலேயே மாதவியின் பிறப்பால் நேர்ந்த குற்றம் அவளுடைய வாழ்க்கையைப் பாழ்படுத்தியது என்றால், கோவலனுடைய தொழில் முதலியவற்றை அடிக்கடி ஆராய்ந்து இடித்துரைக்க உரிமை ஏது ?

உரிமை இல்லாவிடினும், ஆடம்பர வாழ்வுக்கு இடம் தராமல் எளிமை மேற்கொண்டு வாழ்ந்திருக்கலாம். மாதவியின் அணிகலன்வகைகளையும், மாலைவகைகளையும், கலவை வகைகளையும், பிறவற்றையும் எண்ணிப் பார்க்கும்போது அவள் வாழ்ந்த ஆடம்பர வாழ்வு விளங்குகிறது. அதுவும் கணிகையர்குலப் பிறப்பால் அவள் கற்றதே ; கற்றது மட்டும் அன்றி இன்றியமையாததும் ஆகிவிட்டது. கோவலனுடைய உள்ளத்தை அவள் கவர்ந்ததற்கு அவளுடைய ஆடம்பர அலங்காரங்களும் ஒருவகைக் காரணமாக இருக்கையில், அவற்றைத் துறப்பது கோவலனைத் துறப்பது போன்றது அன்றோ? இந்திரவிழாவின் முடிவில் கோவலன் வெறுத்த உள்ளத்தோடு இருந்ததைக் கண்ட மாதவி, அவனுடைய வெறுப்பை மாற்றி மகிழ்விப்பதற்காகத் தன்னை மிகச் சிறப்பாக அலங்கரித்துக்கொண்டாள். பத்துத் துவர் ஐந்துவிரை முப்பத்திரண்டுவகை ஓமாலிகை

யில் ஊறிய நன்னீர், கஸ்தூரிக் குழம்பு, செம்பஞ்சுக் குழம்பு, அடிமுதல் முடிவரையில் பற்பலவகை அணிகலன் கள் எல்லாவற்றையும் நாடினுள் :

ஊடற் கோலமொடு இருந்தோன் உவப்பப்
பத்துத் துவரினும் ஐந்து விரையினும்
முப்பத் திருவகை ஓமா லிகையினும்
ஊறின நன்னீர் உரைத்த நெய்வாசம்
நாறிருங் கூந்தல் நலம்பெற ஆட்டிப்
புகையின் புலர்த்திய பூமென் கூந்தலை
வகைதொறு மான்மதக் கொழுஞ்சேறு ஊட்டி
அலத்தகம் ஊட்டிய அஞ்செஞ் சீறடி
நலத்தகு மெல்விரல் நல்லணி செறீஇப்......
.........மாண்புற அணிந்து
கூடலும் ஊடலும் கோவலற்கு அளித்துப்
பாடமை சேக்கைப் பள்ளியுள் இருந்தோள்.

(சிலப். கடலாடு. 75-110)

கோவலன் இத்தகைய ஆடம்பர அலங்காரத்தை விரும்பி வாழ்ந்தான் என்பதும், மாதவி அவனுடைய மனப் பான்மை உணர்ந்தே நடந்துவந்தாள் என்பதும் தெளிவா கின்றன.

உடன் இருந்தபோதுமட்டும் அல்லாமல், பிரிந்து சென்ற நிலையிலும் கோவலனுடைய மனம் இத்தகைய கவர்ச்சியான மணம் முதலியவற்றை விரும்பியிருந்தது என் பதை இளங்கோவடிகள் காட்டுகிறுர். நகரத்தைவிட்டுப் போய்க்கொண் டிருந்த கோவலனைக் கண்டு கோசிகன் மாதவியின் திருமுகத்தைக் கொடுத்தபோது, முதலில் அவ னுடைய மனத்தைக் கவர்ந்தது அதன் மணமே. உடன் வாழ்ந்த காலத்தில் கூந்தலுக்குப் பூசிய நெய்யின் மணம் அதில் புலனுனதை உணர்ந்து அதைக் கைவிட முடியாத வனுய் நின்றுன் என்று இளங்கோவடிகள் கூறுகிறுர் :

**மாதவி ஓலை மலர்க்கையின் நீட்ட**
**உடனுறை காலத்து உரைத்தநெய் வாசம்**
**குறுநெறிக் கூந்தல் மண்பொறி உணர்த்திக்**
**காட்டியது ஆதலின் கைவிட லீயான்.**

(சிலப். புறஞ்சேரி. 82-85)

இத்தகைய மனப்பான்மைஉடையவனிடத்தில் மாதவி வேறு எவ்வாறு நடந்திருக்க முடியும்? அவளுடைய பிறப்பால் அமைந்த வாழ்க்கை ஒரு பக்கம் கட்டாயப்படுத்த, மற்றொருபக்கம் கோவலனுடைய மனப்பான்மை அதற்குத் தூண்டுகோலாய் விளங்க, மாதவி இந்த ஆடம்பர அலங்கார வாழ்வு வாழ்ந்தாள். ஆதலின், மாதவிக்கு இரண்டில் ஒரு வழியே இருந்தது; வாழ்ந்தால், கோவலனைக் கவர வல்ல ஆடல்பாடல் அழகு மிக்க வாழ்வு; இல்லையேல், அனைத்தையும் துறந்து அறநெறியைப் போற்றும் வாழ்வு. கோவலன் உயிருடன் இருந்தவரையில் முன்னைய வாழ்வு இருந்தது; கோவலனுடையவாழ்வு முடிந்ததும் அனைத்தும் விட்டுத் துறவியானாள். இத்தகைய உயர்ந்த பண்பு உடையவள் பொருளாசை கொண்டு கோவலனை வறியவனாக்கினாள் என்று குறை கூறுவது பொருந்தாது.

**ஒருத்திக்கு உரியவன்**

மற்றொரு குறையாக மாதவியிடம் கூறத்தக்கது: அவள் இன்னொருத்தியின் கணவனைத் தன்பால் ஈர்த்து அவளுடைய வாழ்வுக்கு இடையூறாக அமைந்தது.

ஒருத்தி தனக்கு உரிய காதலனைத் தேர்ந்தெடுக்கும் போது, அவன் திருமணம்ஆகாதவனா என்பதை ஆராய்ந்தே நாடவேண்டும். திருமணம் ஆகி முன்னமே வேறொருத்திக்கு உரியவனாக இருப்பின் அவனை நாடுவது குற்றம்; நாடி, அவளுடைய வாழ்வுக்கு இடையூறாகக் குறுக்கே

நிற்றல் அறம் அன்று. இது வாழ்க்கையில் போற்றத்தக்க விதியே ஆகும். எல்லா நாடுகளிலும், சிறப்பாகத் தமிழ் நாட்டில், இந்த விதி ஆன்றோரால் போற்றப்பட்டுவருகிறது. ஆயினும், பயன் என்ன?

இந்த விதியை ஆண்கள் உணர்ந்து மதிக்காதவரையில் பெண்கள் மட்டும் போற்றுவதால் பயன் விளையாது. உலக அறிவும் அனுபவமும் பெறுதற்குப் பெண்களைவிட ஆண்களுக்கே வாய்ப்பு மிகுதி. ஆதலால் பெண்களைவிட ஆண்களுக்கே செல்வாக்கும் மிகுதி. ஆதலின் ஆண்கள் மதித்துப் போற்றாத ஒருவிதி எவ்வளவு சிறந்ததாயினும் நடைமுறையில் செல்வாக்குப் பெறாது. ஆண் பெண் இருசாராரில் ஒரு சாரார் விதியை மீறுவது மற்றொரு சாராரும் மீறுவதாகவே முடிகிறது. அதனால்தான் 'ஒருவன் ஒருத்தி' என்ற இல்வாழ்க்கைமுறையை மிக வற்புறுத்திக் கற்பு என்னும் பெயரால் முன்னோர் விளங்க வைத்தனர். அதையும் எளியோராகிய பெண்களுக்குமட்டும் வற்புறுத்தி ஆண்களுக்கு வற்புறுத்தாமல் விட்ட காரணத்தால் இழுக்கு நேர்ந்தது. (பெண்கள் செல்வாக்குப் பெறும் இக்காலத்தில் சட்டத்தின் பெயரால் இதை நிலைநிறுத்த முயல்கின்றனர். மக்களின் மனம் திருந்திப் பண்பட்டால் அல்லாமல் சட்டம் பெரிய மாறுதல் செய்திடாது.) ஆதலின், இன்றுவரையிலும் குறைபாடு இருந்தேவருகிறது. திருமணமான ஒருவன் இன்னொருத்தியை நாடித் தன் மனைவியைத் துறத்தல் இக்காலத்திலும் பலர் வாழ்க்கையில் இருந்துவருகிறது. புதியவள் பழையவளின் வாழ்க்கைக்கு இடையூறாக நிற்பது இன்றும் உள்ளது. முற்போக்கான இந்த நூற்றாண்டிலேயே இது தவிர்க்க முடியாத குறையாக உள்ளபோது, பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மாதவியிடம் இதைப் பெரிய குற்றமாகக் காட்டிக் குறைகூற முடியுமோ? ஆயினும் குறை குறைதான்.

குடும்பமும் சமுதாயமும்

தவிர, மாதவியின்மேல் இத்தகைய குற்றத்தைச் சுமத்துவதற்குமுன், அவள் பிறந்த குடும்பத்திற்குச் சமுதாயம் விதித்த கட்டுப்பாட்டையும் எண்ணிப் பார்த்தல் வேண்டும். கணிகையருக்குப் பொதுமகளிர், விலைமாதர், வரைவின்மகளிர் என்ற பெயர் அமைந்திருந்தமையே அக்காலத்தில் இருந்துவந்த குறையைக் காட்டுகிறது. பெற்ற தாய் என்ன காரணத்தாலோ ஒருவனோடு வாழும் வரையறை இழந்தாள் என்றால், அவளுடைய வயிற்றில் பிறந்த மகளையும் அவ்வாறே வாழ்க்கை நடத்துமாறு கட்டாயப்படுத்தும் அளவிற்கு அக்காலத்துச் சமுதாயத்தில் அந்த மாசு படிந்திருந்தது. தாய் பலர்க்கு உரியவளாக வாழ்ந்து இழுக்கு உற்றவளாக இருந்தாள் என்பதால், அவளுடைய மகளையும் பலரோடு வாழ்தலே கடமை என்று வற்புறுத்திய காலம் அது. அந்தத் தாயின் வயிற்றில் பிறந்தது மகளுடைய குற்றம் அன்று; ஆயினும் மகளையும் பொதுமகள், விலைமகள், வரைவின்மகள் என்று கட்டாயப்படுத்திக் கெடுக்கும் கொடுமை இருந்த காலம் அது. அந்தக் காலத்தில் அத்தகைய கொடுமைக்கு இரையாக வேண்டிய மாதவி, பொதுமகள் ஆகாமல், விலைமகள் ஆகாமல், வரைவின்மகள் ஆகாமல் கோவலனுடைய காதலியாக ஒருநெறிப்பட்டு வாழ்ந்ததை எண்ணும்போது, மாதவியைக் குறைகூறுவதே குற்றம் எனத் தோன்றும்; குறை கூறுவதற்கு மாறாக அவளைப் போற்றிப் புகழவே தோன்றும்.

மாதவிக்கு வேறு வழி இல்லை. முன்னமே திருமணம் ஆனவனை அவள் பெற வேண்டும்; அல்லது, திருமணம் ஆகாத ஒருவனை அவள் நாடியிருந்தாலும், அவன் மற்றொருத்தியைக் (குலப்பெண்களுள்) தேடி மணந்துகொள்ள விடவேண்டும். எவ்வாறேனும் அவள் இன்னொருத்தியின்

வாழ்வுக்கு இடையூறு செய்யாமல் தான் வாழ வழி இல்லாதவள் ஆனுள். இது கொடுமை என்றும் குற்றம் என்றும் அவளே உணரும் காலம் வந்தபோது, சமுதாயத்தை எதிர்த்து நிற்கத் துணிந்தாள்; எதிர்த்தாள்; கணிகையரின் வாழ்வைப் பழித்தாள்; பெற்ற தாயின் வேண்டுகோளை யும் மறுத்தாள். "அவள் காட்டும் நெறியில் செல்லேன்" என உறுதி பூண்டாள். "யான் மட்டும் அல்லாமல், என் மகள் மணிமேகலையும் தீய வாழ்வில் புகாமல் இனித் துறவு நெறியில் நிற்பாள்" என்று அவளுடைய கூந்தலையும் களைந்தாள். துயர்விளைக்கும் இந்தக் கணிகையர்கோலம் அவளை அணுகாமல் ஒழிவதாக என்று உலகம் திகைக்கும் செயல் செய்தாள்:

நற்ருய் தனக்கு நற்றிறம் படர்கேன்
மணிமே கலையை வான் துயர் உறுக்கும்
கணிகையர் கோலம் காணுது ஒழிகெனக்
கோதைத் தாமம் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்துஅறம் கொள்ள

(சிலப். நீர்ப்படை, 104-108)

"தலைக்கோல் ஆசான் பின்உளன் ஆகக்
குலத்தலை மாக்கள் கொள்கையின் கொள்ளார்
யாது நின்கருத்து என்செய் கோ"என
மாதவி நற்ருய் மாதவிக்கு உரைப்ப,
"வருகஎன் மடமகள் மணிமே கலை"என்று
உருவி லாளன் ஒருபெருஞ் சிலையொடு
விரைமலர் வாளி வெறுநிலத்து எறியக்
கோதைத் தாமம் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்துஅறம் படுத்தினள்

(சிலப். வரந்தரு. 20-28)

என்னும் அடிகளில் பலருடைய துயரத்திற்குக் காரண மான கணிகையரின் வாழ்க்கையை மாற்றிய துணிவும்,

பெற்ற தாய் கூறியும் பொருட்படுத்தாமல், தான் உணர்ந்த நன்னெறியில் நடந்த திட்பமும் விளங்குகின்றன. காமன் தன் மலர்க்கணையைத் துறந்து வருந்தும்படியாக அழகிளங் கன்னியான மணிமேகலையின் கூந்தலைக் களைந்தாள் என்று உள்ளம் உருகச் சாத்தனார் கூறுகிறார்.

அடுத்த இந்திர விழாவிற்கு மாதவி செல்ல மறுத்தாள். தன் மகள் மணிமேகலையையும் அனுப்ப மறுத்தாள்.

அரசனும் மற்றவரும் உற்ற துன்பத்தையும் பொருட்படுத்தாமல் சமுதாயத்தை எதிர்த்துப் போராடி வென்றாள்:

**ஆங்கது கேட்ட அரசனும் நகரமும்**
**ஓங்கிய நன்மணி உறுகடல் வீழ்த்தோர்**
**தம்மின் துன்பம் தாம்நனி எய்த......** (ஷை 29-31)

ஊரார் தூற்றியுரைத்த பழியையும் பொருட்படுத்தவில்லை:

**கற்றுத்துறை போகிய பொற்றொடி நங்கை**
**நற்றவம் புரிந்தது நாணுடைத்து என்றே**
**அலகில் மூதூர் ஆன்றவர் அல்லது**
**பலர்தொகுபு உரைக்கும் பண்பில் வாய்மொழி.**

(மணிமேகலை: ஊரலர். 32-35)

தன் மகளையும் அறநெறியில் செலுத்திக் காக்க முனைந்தாள்; "மாபெரும் பத்தினியாகிய கண்ணகியின் மகள் மணிமேகலை. கணிகையாகிய என் வயிற்றில் பிறந்த குற்றம் அவளைச் சாராது. அரிய தவத்துறைக்கு அல்லாமல், குற்றமான கணிகைத்தொழிலுக்கு அவள் வாராள்" என்று உறுதிபெற மறுத்தாள்:

**மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை**
**அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்**
**திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்.**

(ஷை 55-57)

இத்தகைய உறுதியும் உயர்வும் உடைய மாதவி இந்த உண்மையைத் தன் வாழ்வின் தொடக்கத்தில் உணர்ந்திருந்தால், கோவலனை நாடியிருக்க மாட்டாள். கண்ணகியின் வாழ்க்கைக்கு இடையூறாக நின்றிருக்கமாட்டாள். ஆயின், அப்போது இளமையின் அறியாமை ஆட்கொண்டது. போதிய உலக அறிவும் அனுபவமும் இல்லாத காரணத்தால், குடும்பத்தாரின் ஏற்பாட்டுக்கு இசைந்து நடந்தாள்; கோவலனிடம் அன்பு செலுத்தினாள்; கண்ணகியின் கணவன் என்று ஆய்ந்தறிந்து, இன்னொருத்தியின் காதலன் என்று விலக்கும் பண்பை அப்போது அவளிடம் எதிர்பார்த்தல் இயலுமோ? கூனியின் கையில் மாலையைக் கொடுத்து, நகர நம்பியர் திரியும் நெடுந்தெருவில் மாதவியை விலை கூறி நிற்கச் செய்யும் நிலைமையில் அவளுடைய சுற்றத்தாரின் கொள்கை இருந்தது. சுற்றத்தார் விலை கூறி நிற்பதை இயற்கை என்று உணரும் அளவிற்கு மாதவியின் மனநிலை இருந்தது. ஆதலின், இன்னொருத்தியின் கணவனை நாடினாள் என்றோ, இன்னொருத்தியின் வாழ்வுக்குக் குறுக்கே நின்றாள் என்றோ மாதவியைப் பழிப்பது அறம் அன்று; அதற்கு மாறாக, அது தவிர வேறு வழி இல்லாதவாறு அவளைக் கொடுமைப்படுத்திய சமுதாயத்தையே பழித்துக் குறை கூறவேண்டும்.

**மாறிய மனப்பான்மை**

கோவலன் இன்னொருத்தியின் கணவன் என்பது மாதவிக்குத் தெரிந்ததே. ஆயின், இன்னொருத்தியின் கணவனை நாடுதல் குற்றம் என்று அவள் உணர்ந்தது கோவலன் பிரிந்து சென்ற பிறகுதான். உணர்ந்ததும் அவளுடைய மனம் மாறியது; கோவலனுடன் தான்கொண்ட உறவைப் பற்றிய எண்ணத்தையும் மாற்றிக்கொண்டாள்; அது முதல் கோவலனைக் குறித்து அவள் கொண்ட கருத்து உயர்வும் தூய்மையும் உடையதாக விளங்குகிறது.

மாதவியின் கடிதங்களாக இரண்டு சிலப்பதிகாரத்தில் உள்ளன. ஒன்று, இந்த மனமாறுதல் வருவதற்கு முந்தியது; மற்றொன்று, இந்த மனமாறுதல் வந்தபின் எழுதியது. இரண்டு கடிதங்களுக்கும் உள்ள வேறுபாடு மாதவியின் உயர்வை எடுத்துக்காட்டுகிறது.

முதல் திருமுகம், கடற்கரையில் கானல்வரி கேட்டு வெறுத்துக் கோவலன் பிரிந்தபின்பு மாதவி எழுதியது. கோவலனுடைய வெறுப்பு நிலையானது அன்று என்றும், எதிர்பாராமல் தோன்றிய வெறுப்பு விரைவில் மாறிவிடும் என்றும், தன் அன்பான அழைப்புக்கு இணங்கி விரைந்து மீள்வான் என்றும் நம்பி மாதவி எழுதியது அது. ஆகவே, கோவலனைத் தன் காதலனுகவே கொண்டு தீட்டிய காதல் திருமுகம் அது. திருமுகத்தில் எழுதிய சொற்பொருள் மட்டுமே அல்லாமல், திருமுகம் எழுதிய ஏடும் எழுத்தாணியும் எழுத்தாணி தோய்ந்த குழம்பும் ஏடு அமைந்த அமைப்பும் முதலிய எல்லாம் காதல்மணம் கமழ்ந்து விளங்கின. சண்பகம், தாழை, மாதவி, பச்சிலை, பித்திகை, மல்லிகை, வெட்டிவேர், செங்கழுநீர் ஆகிய நறுமண மலர்களும் இலைகளும் வேரும் கலந்து தொடுத்த ஒரு மாலையை எடுத்தாள். அவற்றிற்கு இடையே அமைந்த தாழை மடலில் தன் உள்ளத்தைத் தீட்டினுள். அருகே தொடுக்கப்பட் டிருந்த பித்திகையின் அரும்பையே எழுத்தாணியாகக் கொண்டு எழுதினுள். தன்னை அழகுபடுத்திக் கொள்வதற்காக வைத்திருந்த செம்பஞ்சுக் குழம்பிலே பித்திகை அரும்பைத் தோய்த்து எழுதினுள். தாழையின் வெண்ணிற மடலில் செம்பஞ்சுக் குழம்பின் செந்நிற எழுத்துக்கள் விளங்கின. “உலகத்து உயிர்கள் எல்லாவற்றையும் தம் தம் துணையோடு சேர்த்து மகிழ்விக்கும் இனிய இளவேனில் ஓர் இளவரசன். அவன் முறைதவறிய காலம் இது. அந்தி வேளையில் தோன்றி நிலவு பரப்பும் திங்களோ

நேர்மையானவன் அல்லன். கூடிய காதலர் பிரிந்தாலும், பிரிந்த காதலர் துணையை மறந்தாலும், காமன் மலரம்பு எய்து உயிர்கொள்ளும் கொடுங்கோலனாக இருக்கிறான். இவ்வாறு அவன் உயிர் கொள்வதில் வியப்பு ஒன்றும் இல்லை. அறிந்தருள்க" என்று எழுதினாள். அந்தத் திருமுகத்தில் பலவகைக் கலைகளின் திறனும் விளங்கியது. பண்ணும் திறமும் பயனற்றவை என்று கூறத்தக்க இன்னிசை உடைய மழலைமொழியால், பிரிவாற்றாமையை நினைந்து கசிந்த உணர்வால் சொல்லிச் சொல்லி எழுதினாள்:

சண்பகம் மாதவி தமாலம் கருமுகை
வெண்பூ மல்லிகை வேரொடு மிடைந்த
அஞ்செங் கழுநீர் ஆயிதழ்க் கத்திகை
எதிர்பூஞ் செவ்வி இடைநிலத்து யாத்த
முதிர்பூந் தாழை முடங்கல்வெண் தோட்டு
விரைமலர் வாளியின் வியன்நிலம் ஆண்ட
ஒருதனிச் செங்கோல் ஒருமகள் ஆணையின்
ஒருமுகம் அன்றி உலகுதொழுது இறைஞ்சும்
திருமுகம் போக்கும் செவ்வியள் ஆகி
அலத்தகக் கொழுஞ்சேறு அளைஇ அயலது
பித்திகைக் கொழுமுகை ஆணி கைக்கொண்டு,
மன்னுயிர் எல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
இன்இள வேனில் இளவர சாளன்
அந்திப் போதகத்து அரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனும் செவ்வியன் அல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்
தணந்த மாக்கள் தம்துணை மறப்பினும்
நறும்பூ வாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூது அன்றுஇஃது அறிந்தீ மின்என

***எண்ணெண் கலையும் இசைந்துடன் போகப்***
***பண்ணும் திறனும் புறங்கூறு நாவின்***
***தளைவாய் அவிழ்ந்த தனிப்படு காமத்து***
***விளையா மழலையின் விரித்துரை எழுதி.***

(சிலப். வேனில். 45-67)

ஏடு எழுத்தாணி குழம்பு எழுத்து சொல் பொருள் எல்லாம் காதலைப் பேசுமாறு இத்தகைய திருமுகத்தை எழுதிய மாதவியின் மனநிலையை உணராமல் கோவலன் அதைக் கையில் வாங்கவும் மறுத்தான்; பழித்தான். அதை அறிந்தபோதும் மாதவியின் மனம் மாறவில்லை, "மாலை வாராவிடினும் காலை வருவார்" என்று நம்பிக் களங்கமற்ற நெஞ்சோடு காத்திருந்தாள். காலையிலும் கோவலன் வரவில்லை; கொடிய செய்தியே வந்தது; கோவலன் கண்ணகியோடு வீட்டைவிட்டு நகரைவிட்டுப் புறப்பட்டு யார்க்கும் தெரியாமல் எங்கோ சென்றுவிட்டான் என்ற கொடிய செய்தியே காலையில் வந்தது. துயர்க் கடலில் மாழ்கி நொந்தாள். கோவலன் தனியே சென்றான் என்று அறிந்திருந்தால் வருந்தியிருப்பாள்; அந்த வருத்தத்தின் பயனுகப் புதிய உணர்வு ஒன்றும் பெற்றிருக்கமாட்டாள். தனியே செல்லாமல் துணைவியோடு சென்றான் என்று அறிந்தமையால் அவளுடைய உள்ளத்தில் புதிய ஒளி வீசியது. தான் யார், கண்ணகி யார் என எண்ணினாள். தன்னை விட அவளே உரிமை மிகுந்த துணைவி என்பதை எண்ணினாள். அவளுடன் சில ஆண்டுகள் வாழ்ந்திருந்த கோவலன் தன்னிடம் வந்தபின் பல ஆண்டுகளாக அவள் எவ்வாறு வருந்தியிருக்கக்கூடும் என்று எண்ணினாள். சில நாழிகைப் பிரிவாற்றாமையால் தான் வருந்திய துயரத்தைக்கொண்டு பல ஆண்டுகள் பிரிவாற்றாமல் வருந்திய கண்ணகியின் துயரத்தை அளந்து பார்த்தாள். கண்ணகியின் துயரத்திற்குத் தான் காரணமாக இருந்ததை உணர்ந்தாள்.

கண்ணகியின் வாழ்வுக்குத் தான் குறுக்கே நின்ற தவறு நினைந்து உருகினாள். உள்ளத்தளவில் உடனே கோவலனின் காதலிலிருந்து விலகி நின்றாள். கண்ணகியே கோவலனுடன் வாழ உரிமை உடையவள் என உணர்ந்தாள். தனக்கு அத்தகைய உரிமை இல்லை என்பதையும் தெளிந்தாள். இத்தனை எண்ணமும் உணர்வும் தெளிவும் மாதவியின் இரண்டாம் திருமுகத்தில் விளங்குகின்றன.

கோசிகன் தன் துயர் கேட்டு ஆறுதல் கூற வந்த போது, அவன் வாயிலாகக் கோவலனுக்குத் திருமுகம் எழுதியனுப்பினாள். இரண்டாவதாக எழுதிய இந்தத் திருமுகத்தில் முதல் கடிதத்தின் காதல் மணம் ஒரு சிறிதும் இல்லை. ஏடு, எழுத்தாணி, எழுத்து, சொல் ஒன்றும் காதல் குறிப்பைப் புலப்படுத்த வில்லை. தந்தைக்கோ தமையனுக்கோ ஆசிரியனுக்கோ எழுதும்கடிதம்போல் சொல்லும் பொருளும் அமைந்தன. அதனால்தான் அதைப் படித்த கோவலன், "இந்தத் திருமுகம் என் தந்தைக்கு அவ்வாறே அனுப்பக் கூடியவாறு பொருளுரை பொருந்தியதாக இருக்கிறது" என்று எண்ணினான்; எண்ணியவாறே அதைத் தன் தந்தைக்கு எழுதிய திருமுகமாக்கிக் கொடுத்தனுப்பினான். திருமுகத்தில் புதியமணம் ஒன்றும் கமழவில்லை ; முத்திரை இடுவதற்காக அதை மாதவி தன் கூந்தலில் ஒத்தினாள். அதனால் அவளை அறியாமல் கூந்தலில் இருந்த பழைய மணம் அதில் அமைந்தது. அவ்வளவே அன்றி மாதவி தானாக அதை அழகுபடுத்தவில்லை ; மணம் ஊட்டவும் இல்லை. தாழை மடலும் பித்திகை அரும்பும் செம்பஞ்சுக் குழம்பும் இப்போது இல்லை. அவை கைக்கு எட்டாமற் போகவில்லை ; கண் எதிரே இருந்தன ; ஆனால் மாதவியின் மனமே அவற்றை நாடவில்லை. மலர்மாலையை அவளுடைய கை எடுக்கவில்லை ; ஓலையையே எடுத்து எழுதியது. இனிய இளவேனிலோ திங்களின் நிலவோ காமனின் மலரம்போ அவளுடைய

எழுத்தில் வரவில்லை. கூடியவர், பிரிந்தவர், மறந்தவர் எனக் காதலின் வாழ்வும் குறிக்கப்படவில்லை. முதல் திருமுகத்தில் இல்லாத 'அடிகள்' என்ற குறிப்பு இதில் காண்கிறோம். அந்தக் குறிப்பிலேயே ஒத்த உரிமை இல்லாமல், பெரியோர்க்குச் சிறியோர்பணியும் பணிவு காணப்படுகிறது. கோவலனோடு உரிமையுடன் பழகிய மாதவியை அங்குக் காண்பதற் கில்லை. கோவலனை ஆசிரியன்போல் கொண்டு வழிபடும் மாதவியே அங்குக் காணப்படுகிறாள். "அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்" என்று திருவடிகளை வணங்கி எழுதியதாகக் குறித்த தொடர் பணிவையும் வணக்கத்தையும் புலப்படுத்துகிறது.

> **அடிகள் முன்னர் யான்அடி வீழ்ந்தேன்**
> **வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்**
> **குரவர்பணி அன்றியும் குலப்பிறப் பாட்டியோடு**
> **இரவிடைக் கழிதற்கு என்பிழைப்பு அறியாது**
> **கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்**
> **பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி**

(சிலப். புறஞ்சேரி. 87 - 92)

என்பது திருமுகம். காதலி காதலனுக்கு எழுதிய கடிதம் என்று உணரத்தக்க குறிப்பு ஒன்றும் இதில் இல்லை. "பொய்தீர் காட்சிப் புரையோய்" என்ற விளியிலும் சான்றோர் ஒருவரை வணங்கும் வணக்கமும் வழிபாடுமே புலனாகின்றன. "அறந்தீமின்" என ஏவலாக முடிந்தது முன்னைய திருமுகம். "போற்றி" என்று பணிவுடைய பான்மையோடு முடிந்தது இந்தத் திருமுகம். "என் திருந்தாச் சொற்களைப்பொறுத்து ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்ற வேண்டுகோளில் ஒருவகை அச்சமும் அடக்கமும் புலப்படுகின்றன. "என் பிழை அறியேன்" என்று குற்றம் நினைந்து வருந்திடும் குறிப்பும் விளங்குகிறது.

"கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்" என்ற தொடர் காதலனை நெருங்கி வேண்டும் வேண்டுகோளாக அமையாமல், சான்றோர் ஒருவரை அணுகியும் அணுகாமல் நின்று வேண்டுவதாகவே உள்ளது. இவ்வாறு பல சொற்களாலும் தொடர்களாலும் கோவலனுடைய காதலி என்ற உரிமையைப் பாராட்டாமல் மாறிய நெஞ்சுடன் எழுதியவள், தன் உரிமையை முற்றும் துறந்த மனப்பான்மையை ஒருசிறு தொடரால் புலப்படுத்திவிட்டாள். அதுதான் குலப்பிறப்பாட்டி என்று கண்ணகியைக் குறித்த தொடர். தான் பிறந்த பிறப்பால் தாழ்வுற்றவள் என்றும், கோவலனுக்குத் துணைவியாக விளங்கும் தகுதியற்றவள் என்றும், குலமகளாகிய கண்ணகியே வாழ்க்கைத்துணைவி என்றும் தான் உணர்ந்த உணர்வு எல்லாம் அந்தச் சிறு தொடரால் புலப்பட வைத்தாள். தன்னை விட்டுக் கோவலன் பிரிந்ததற்காக வருந்துவதாகத் தெரிவிக்கவில்லை; தான் பிரிவாற்றாமல் வருந்துவதற்கு உரிய காதலி அல்லள் என எண்ணினாள். தான் அவ்வாறு வருந்துவதற்கும் உரிமையற்றவள் என்னும் கருத்தால் அதைக் குறிப்பிடவில்லை. துணைவியாகிய கண்ணகியோடு நகரை விட்டு இராக்காலத்தில் பிரிந்து சென்றதற்காகவே வருந்தினாள். இவ்வாறு அவளுடைய நெஞ்சம் கோவலனுக்கும் கண்ணகிக்கும் குறுக்கே நிற்காமல் விலகிய உண்மையை இரண்டாம் திருமுகம் தெளிவாக்குகிறது.

கோவலனுடைய வாழ்க்கையில் தான்முன்பெற்றிருந்த காதல்தொடர்பைத் துறந்து விலகி நின்ற இந்த மனப்பான்மையே பிறகு நிகழ்ந்த மாறுதல்கள் எல்லாவற்றிலும் விளங்கியது. தன்னைக் கோவலனுடைய காதலியாகக் கருதாமல் யாரோ ஒருத்தியாகக் கருதிய காரணத்தால்தான், கோவலன் மாண்டபிறகு உடனுயிர் துறக்க வேண்டும் என்று ஆர்வம் பிறக்காமல் தனி ஒருத்தி உலகப் பற்றைத் துறப்பது போல் துறவுக் கோலம் பூண்டாள். கோவல

னுடைய வாழ்க்கையில் கண்ணகிக்கு இருந்ததுபோன்ற உரிமை தனக்கு இல்லையென்று உணர்ந்த காரணத்தால், மணிமேகலையைத் தன் மகள் என்று கூருமல் கண்ணகியின் மகள் என்று குறிப்பிட்டாள். தான் பெற்றிருந்த காதல் உரிமை முதலிய எல்லாம் கண்ணகிக்கே உரியன என்று உளமாரக் கருதிவிட்ட மாறுதலால், தன் மகள் என்று கொண்டிருந்த மணிமேகலையையும் கண்ணகியின் மகள் என்று கூறும் மனப்பான்மை பெற்ருள்; "மாபெரும் பத்தினிமகள் மணிமேகலை" என்ருள்.

**மனநிலை அறியாமை**

கடல்விளையாட்டுக் காண்பதற்காகக் கடற்கரைக்குச் சென்று தங்கியிருந்தபோது கோவலனுடைய மனநிலை அறிந்து நடக்கத் தவறினுள் என்று மாதவிமேல் குற்றம் கூற இடம் உள்ளது. கோவலனுடைய மனநிலை அறிந் திருந்தால், அப்போது ஊடல் கொண்டிருக்கமாட்டாள்; தானும் காதல்குறிப்பு உடையவள்போல் பாடியிருக்க மாட்டாள்; கோவலனும் வெறுத்துப் பிரிந்திருக்கமாட் டான்; ஆகவே மாதவி அவனுடைய மனநிலை அறிந்து நடக்கத் தவறினுள் என்று கூறலாம்.

ஊடுதல் காதலர்க்கு உரியதே; உரிமையின் பயனுய் விளைவதே; நல்லதே, ஆயினும், அவரவரின் இயல்பு அறிந்து செய்யாதபோது நல்லது செய்வதிலும் தவறு உண்டு:

*நன்றுஆற்ற லுள்ளும் தவறுஉண்டு அவரவர்*
*பண்புஅறிந்து ஆற்ருக் கடை.* (குறள். 469)

கோவலனுடைய மனநிலையை அறியாமல் மாதவி ஊடல் கொண்டு பாடினுள். அதனுல் அது தவருக முடிந்தது.

கடற்கரையில் ஓவியத்திரை சூழவிட்டு விதானம் அமைத்து வெண்கால்கட்டிலும் இட்டு அதன்மேல் இருந்து மாதவி கோவலன் கையில் யாழை நீட்டினுள். அதை வாங்கிய கோவலன் காவிரியைக் குறித்தும் கடலை நோக்கியும் பாடத் தொடங்கினுன். பாடத் தொடங்கியபோது மாதவியின் மனம் மகிழ வேண்டும் என்ற நோக்கம் அவனுக்கு இருந்தது. ஆதலின் அவன்மேல் குறை கூறுவதற்கு ஒன்றும் இல்லை.

**ஏவ லன்பின் பாணி யாதுளனக்**
**கோவலன் கையாழ் நீட்ட அவனும்**
**காவிரியை நோக்கினவும் கடற்கானல் வரிப்பாணியும்**
**மாதவிதன் மனம்மகிழ வாசித்தல் தொடங்குமன்.**

(சிலப். கானல். 1)

பாடிய பாடல்களில் அகப்பொருள் கருத்து அமைத்துப் பாடினுன்; காதலன் ஒருவன் காதலியை நினைந்தும் நோக்கியும் கூறும் காதல் கருத்துக்களை அமைத்துப் பாடினுன். அதிலும் தவறு ஒன்றும் இல்லை.

வேட்டுவ வரியில் வேடர்கள் கொற்றவையை வழிபட்டுப் பாடுதல் போல், ஆய்ச்சியர் குரவையில் ஆய்ச்சியர் கண்ணனை வழிபட்டுப் பாடுதல்போல், அக்காலத்துமக்கள் குறித்த வழிபாடு ஒன்று இல்லாதபோது தமிழ்நாட்டின் மரபாக வந்த அகப்பொருட் கருத்துக்களை அமைத்துப்பாடி வந்தனர். இதற்கும் சிலப்பதிகாரமே சான்ருக உள்ளது. குன்றக்குரவையில் குறவர்கள் காதல்கருத்து அமைந்த பாடல்களைப் பாடி மகிழ்ந்தது காணலாம்.

தமிழ்நாட்டில் வீடுதோறும் பாட்டு இசைக்காத நாள் இல்லை; விழா இல்லை : சடங்கு இல்லை. தாலாட்டு முதல் புலம்பல் வரையில் வாழ்நாளைப் பாட்டாலேயே அளந்து காண்பது தமிழ்மகளிரின் வாய். பாட்டு என்பது வாழ்க்

கையைத் தீண்டாத ஒன்ருக எட்டி நிற்காமல், வாழ்க்கையின் உணர்ச்சி எல்லாம் பாட்டாக மலர்வது தமிழகப் பண்பாடு. இன்றும் இந்த நிலைமை மாருமல் விளங்கக் காணலாம். இதைக்கொண்டு சிலப்பதிகாரக் காலத்தில் வேட்டுவ வரியும் ஆய்ச்சியர் குரவையும் குன்றக் குரவையும் முழங்கியதன் உண்மையை உணரலாம். பொதுமக்களின் வாழ்க்கையே இத்தகையது என்ருல் கலைஞரின் வாழ்க்கையில் பாட்டுக்கு அமைந்திருந்த செல்வாக்கு எத்தகையது என்பதை எண்ணித் தெளியலாம். ஆதலின் குன்றக்குரவையில் குறவர்கள் காதல்கருத்து அமைந்த பாடல்களைப் பாடியது போலவே, கோவலன் கானல்வரிப் பாட்டில் காதல்கருத்து அமைத்துப் பாடியதும் இயல்பாக அமைந்ததே ஆகும்.

அவ்வாறு பாடியதில் தவருகக் கொள்ளத் தக்கது ஒன்றும் இல்லை எனினும், மாதவி தவறுபட உணர்ந்தாள் :

**கானல்வரிப் பாடல்கேட்ட மான்நெடுங்கண் மாதவியும்**
**மன்னும்ஓர் குறிப்புஉண்டுஇவன் தன்நிலை மயங்கினன்எனக்**
**கலவியால் மகிழ்ந்தாள்போல் புலவியால் யாழ்வாங்கித்**
**தானும்ஓர் குறிப்பினள்போல் கானல்வரிப் பாடல்பாணி**
**............பாடத் தொடங்குமன்.**

(சிலப். கானல். 24)

கோவலனுடைய மனத்தில் ஏதோ ஒரு காதல் குறிப்பு இருந்தது என மாதவி எண்ணிஞள். யாரோ ஒருத்தியின் மேல் கொண்ட காதலிஞல் அவ்வாறு பாடியதாகத் தவருக உணர்ந்தாள். கோவலன் நிலைமயங்கியதாக எண்ணி உள்ளத்தே ஊடல் கொண்டாள். அந்த ஊடல் குறிப்பை முகத்தாலோ வாய்ச் சொல்லாலோ புலப்படுத்தியிருப்பினும் கோவலன் உண்மையை உணர்ந்துகொண்டிருப்பான். மாதவியோ மகிழ்ந்தவள்போல் நடித்து ஊடல் குறிப்பைத் தன்னுள் மறைத்துக்கொண்டு பாடத்தொடங்கிஞள்.

அதனால் கோவலன் உண்மையை உணரமுடியவில்லை. வேறு ஒருவனிடம் அவள் காதல் கொண்டு பாடியதாக அவன் எண்ணிவிட்டான். அவளுடைய ஊடல் குறிப்பை உணர முடியாவிட்டாலும் உள்ளன்பையாவது நினைந்து பொறுத்திருக்கலாம். "மாயப்பொய் பலகூட்டும் மாயத் தாள்" என்று கணிகையரின் இயல்பை நினைத்துக்கொண் டான்; வெறுப்புத் தோன்றிவிட்டது.

**ஊடலால் துன்பம்**

ஊடலால் நேர்ந்த துன்பங்கள் சிலப்பதிகாரத்தில் இரண்டு இடங்களில் கூறப்பட்டுள்ளன. ஒன்று, மாதவி யின் ஊடலால் கோவலன் எண்ணிப் பார்க்காமல் பிரிந்து சென்று துன்புற்றது. மற்றொன்று, கோப்பெருந்தேவியின் ஊடலால் பாண்டியன் எண்ணிப் பார்க்காமல் ஏவிக் கோவலன்கொலைக்குக் காரணமாக இருந்து தானும் உயிர் துறந்தது.

கோவலன்அமைதியைக் குலைத்து வாழ்வைக் கெடுத் தது மாதவியின் ஊடல். கோவலன்அமைதியைக் குலைத்துச் செங்கோலைக் கெடுத்தது கோப்பெருந்தேவியின் ஊடல். திருவள்ளுவரால் 'காமத்திற்கு இன்பம்' எனப் போற்றப் படும் ஊடல் சிலப்பதிகாரத்தில் துன்பத்திற்குக் காரண மாக உள்ளது.

இந்த இரு வேறு குடும்பங்களிலும் ஊடல் விளைக்கக் காரணமாக இருந்தது கலையே. கோவலனுடைய கடற் கரைப் பாடல் மாதவியின் உள்ளத்தே ஊடல் தோன்றச் செய்தது. மதுரைமகளிரின் ஆடலும்பாடலும் கோப்பெருந் தேவியின் ஊடலுக்குக் காரணமாக இருந்தன. கோவலன் வேறொருத்தியின்மேல் காதல்கொண்டு தன்னிலை மயங் கியதாக எண்ணி மாதவி ஊடல் கொண்டாள். மதுரை மகளிரின் ஆடலும் பாடலும் பாண்டியனுடைய உள்ளத் தைக் கவர்ந்தன என்று கோப்பெருந்தேவி ஊடினாள். தன்

ஊடலை மறைத்து, மகிழ்ந்தவள் போல் நடித்து, யாழ் வாங்கிப் பாடிக் கோவலனுடைய உள்ளத்தில் வெறுப்பை விளைத்தாள் மாதவி. ஊடலை உள்ளத்தே மறைத்து, தலைநோய் வருத்தம் என நடித்து, தன் அந்தப்புரத்தை நாடிச் சென்று, பாண்டியனுடைய உள்ளம் அமைதி இழக்கச் செய்தாள் கோப்பெருந் தேவி :

**கூடல் மகளிர் ஆடல் தோற்றமும்**
**பாடல் பகுதியும் பண்ணின் பயங்களும்**
**காவலன் உள்ளம் கவர்ந்தன என்றுதன்**
**ஊடல் உள்ளம் உள்கரந்து ஒளித்துத்**
**தலைநோய் வருத்தம் தன்மே லிட்டுக்**
**குலமுதல் தேவி கூடா தேக.**

(சிலப். கொலைக். 131–136)

கோப்பெருந்தேவியைப் போலவே மாதவியும் ஊடலை உள்ளத்தே ஒளித்து, மகிழ்ச்சியால் பாடுபவள்போல் யாழ் வாங்கிப் பாடினாள். மாதவி ஒளித்திருந்த ஊடலை அறியாத கோவலன், வேறு காதல் குறிப்பால் அவள் அவ்வாறு பாடியதாக எண்ணி வெறுத்தான்.

அன்று கோவலன் உள்ளமும் திறந்த உள்ளமாக இருக்கவில்லை. அவனும் தன் உள்ளத்தில் ஒரு வருத்தத்தை ஒளித்து வைத்திருந்தான். காதல் குறிப்பு ஒன்றும் ஒளித்துவைத்திருக்கவில்லை ; கவலை ஒன்று ஒளித்து வைத்திருந்தான். மற்ற நாட்களைப் போல் அன்றும் திறந்த நெஞ்சத்துடன் உரிமை கொடுத்துப் பழகுவான் என்றே மாதவி எதிர்பார்த்தாள். அதனால்தான் உரிமை கொண்டு போராடத் தொடங்கினாள். அந்தப் போராட்டத்தின் தொடக்கமாகவே தானும் காதல்குறிப்புடன் யாழ் வாங்கிப் பாடினாள். கோவலன் முதலிலிருந்து தனக்குக்

கொடுத்துவந்த உரிமையைக்கொண்டே அன்று அவள் காதல் பாட்டாலேயே அவனை எதிர்த்துப் போராடத் தொடங்கினுள்.

அன்றுவரையில் கோவலன் கவலையற்ற நெஞ்சோடு பழகினுன்; மாதவியின் உரிமைப்போரான ஊடலைக்கண்டு கண்டு மகிழ்ந்தான். அன்றுமட்டும் அவனுடைய மனம் வேறு நிலையில் இருந்தது. அவனுடைய உள்ளத்தில் கவலைப் பேய் குடிகொண் டிருந்தது. அது காரணமாக, மாதவி யின் உரிமைப் போராட்டத்தை-யாழ் இசைத்துக் காதல் பாட்டுப் பாடிய போக்கைக்-குற்றமாக உணர்ந்தான்; அது அவள் பிறந்த குடும்பத்தின் குற்றம், மாயமும் பொய்யும் கலந்த கணிகையர் தொழிலின் குற்றம் என்று எண்ணி " மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள் " என்று வெறுத்தான். சில நாழிகை கழித்து வசந்தமாலை தேடிவந்த போதும் அவள் கொண்டுவந்த திருமுகத்தை மறுத்து; மாதவியை ஆடல் மகள் என்று பழித்து அனுப்பினுன். கண்ணகியிடம் சென்றபோதும், " சலம்புணர் கொள்கைச் சலதி " என்று மாதவியைப் பழித்துப் பேசினுன்.

ஊடல் கோவலனுக்குப் புதிது அன்று; கண்ணகி யிடம் காணுத ஊடலை அவன் மாதவியிடம் கண்டு பழகிய வன். தனக்கு என்று உரிமை ஒன்றுமே இல்லாமல், உரி மைப் போரான ஊடலும் இல்லாமல், கணவன்வழியே தன்வழி என்று வாழ்ந்தவள் கண்ணகி. தொடக்கத்தி லிருந்தே ஆடல் பாடல் அழகுக் கலைகளோடு ஊடலும் ஒரு கலையாகக் கொண்டு கோவலனை மகிழ்வித்தவள் மாதவி.

**கலவியும் புலவியும் காதலற்கு அளித்துஆங்கு**
**ஆர்வ நெஞ்சமொடு கோவலற்கு எதிரிக்**
**கோலம் கொண்ட மாதவி.**

(சிலப். அந்தி. 32-34)

கூடலும் ஊடலும் கோவலற்கு அளித்துப்
பாடமை சேக்கைப் பள்ளியுள் இருந்தோள்
(சிலப். கடல். 109-110)

என்று இளங்கோவடிகள் இருமுறை இதனைத் தெளிவிக்கிறார். ஆதலின் இந்த உரிமைப் போரைக் கண்டறியாதவன் அல்லன் கோவலன்.

## உள்ளத்தின் களங்கம்

ஆயின், அன்று மாதவியின் உள்ளத்திலும் களங்கம் புகுந்தது; கோவலன் உள்ளத்திலும் களங்கம் இருந்தது. காதலர்க்கு இன்றியமையாதது ஆகிய கரவற்ற நெஞ்சம் அன்று இருவர்க்கும் இல்லை. கரவு ஒருவரிடம் இருந்தாலேயே, இருவரின் ஒருமைப்பாட்டைச் சிதைக்க வல்லதாகும். இருவர் நெஞ்சிலும் கரவு இடம் பெறின், ஒருமைப்பாடு உடைய காதலுக்கு இடம் ஏது? காதலன் அறியாததாகக் காதலியின் உள்ளத்தில் ஒன்று இருத்தல் ஆகாது. காதலி அறியாததாகக் காதலனுடைய உள்ளத்திலும் ஒன்று இருத்தல் ஆகாது. "என் நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே" என்று தயங்காமல் கூறத்தக்க தூய நெஞ்சம் வேண்டும். ஒருவர் மற்றொருவரின் இதயத்தில் மாறிப் புகும் காதலுக்கு இந்தத் தூய்மை இன்றியமையாதது. திறந்த உள்ளம் இல்லாமல், உள்ளத்தில் ஏதேனும் கரந்து நிற்குமாகில், காதல் என்னும் மணிவிளக்கு மாசுறும். கடற்கரையில் ஓவிய எழினி சூழ்ந்த இருக்கையுள் வீற்றிருந்த காதலர் இருவர்க்கிடையே இத்தகைய மாசு குடிபுகுந்த காரணத்தாலேயே, அவர்களின் வாழ்க்கை பாழ்பட்டது.

கானல்வரி பாடிய அன்று, மக்கள் பெருந் திரளாக வந்து மகிழும் சூழ்நிலை இருந்தும், கடற்கரையின் புலவு நாற்றத்தைப் போக்கவல்ல தாழைமணம் மிகுந்திருந்தும்,

புன்னைமரத்தின் நன்னீழலில் ஓவியத்திரைசூழ்ந்த இருக்கை சிறப்புற அமைந்திருந்தும், வெண்கால் அமளிமிசை வீற்றிருந்து இன்னிசை யாழைக் கையில் ஏந்தியிருந்தும், காதல் வாழ இடம் இல்லாமல் போயிற்று; நெஞ்சின் மூலையில் காதலர் அறியாதவாறு ஒவ்வோர் எண்ணம் இருவரிடமும் ஒளிந்திருந்தமையால், காதலுக்கு அமைந்திருந்த எல்லாச் சூழ்நிலைச் சிறப்பும் பயனற்றுப் போயின.

மாதவியின் உள்ளத்தே ஒளிந்திருந்தது, கோவலன் வேறொருத்தியிடம் காதல் கொண்டு மயங்கினான் என்ற எண்ணமே எனக் கண்டோம். இனி, கோவலனுடைய உள்ளத்தே ஒளித்திருந்த கவலை என்ன என்பதைக் காண்போம்.

## வறுமையால் கவலை

அன்று மாலை கண்ணகியிடம் திரும்பிச் சென்று அவளுடைய வாடிய மேனியைக் கண்டதும் அவன் சொன்ன சொல்லில் அந்தக் கவலை வெளிப்பட்டது. கண்ணகியைப் பார்த்து, "வஞ்சமும் பொய்யும் கொண்டவளோடு காலம் கழித்துக் குன்று போன்ற செல்வம் தொலைந்தது. வறுமை எனக்கு நாணம் தருகிறது" என்பதே அவன் முதலில் கூறிய மொழி:

> பாடமை சேக்கையுள் புக்குத்தன் பைந்தொடி
> வாடிய மேனி வருத்தம்கண்டு யாவும்
> சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடிக்
> குலம்தரு வான்பொருட் குன்றம் தொலைந்த
> இலம்பாடு நாணுத் தரும்எனக்கு என்ன.
>
> (சிலப். கனாத். 67–71)

செல்வம் தொலைந்து வறுமை உற்றதால் ஆகிய கவலை அப்போதுதான் திடீரென ஏற்பட்டிருக்க முடியாது. முன்னரே நெஞ்சில் ஒளிந்திருந்ததால்தான் கண்ணகியைக்

கண்டு பேசத்தொடங்கியவுடனே வெளிப்பட்டது. வறுமையால் நேரும் கவலை, உயிர்வாழ்க்கையைப் பற்றிய கவலையாகும்; ஆதலின் நெஞ்சின் ஆழத்தில் வேரூன்றும் கவலையாகும். அத்தகைய கவலையைக் கோவலன் தன் உள்ளத்தில் மறைத்து வைத்து மாதவியோடு மகிழ்ந்தவன்போல் இருந்தான். மாதவியிடம் கூருமல் அதை மறைத்துவைக்க வேண்டியதில்லை. ஆயினும் மறைத்து வைத்தான். முதலில் செல்வச் சிறப்பால் அடைந்த உறவு மாதவியின் உறவு. அந்த உறவு வளர்வதற்கு உள்ளன்பு காரணமாகிய போதிலும், செல்வச் சிறப்பும் துணைசெய்து வளர்த்து வந்தது. இவ்வாறு செல்வச் சிறப்பால் ஏற்பட்டு வளர்ந்த உறவு, வறுமையால் வாடுமோ எனக் கோவலன் அஞ்சினுன்போலும்! செல்வரையே வரவேற்று மகிழ்விக்கும் கணிகையரின் பொது இயல்பையும் நினைந்து அஞ்சியிருக்கக் கூடும். மாதவியின் பேரன்பு அதற்கு விதிவிலக்கானது என்பதையும் அவன் எண்ணியிருக்கலாம். ஆயினும் செல்வநிலை தாழ்ந்தபோது, உதவக்கூடிய அன்புடையவரையும் உதவமாட்டார் என்று ஐயுறுவதே உள்ளத்தின் இயல்பு. கோவலனும் அவ்வாறே ஐயுற்ருன்; தயங்கினுன்; மாதவிக்கும் கூருமல் கவலையை உள்ளத்தே மறைத்து வைத்திருந்தான். கானல்வரிப்பாட்டு ஐயத்தைத் தீர்த்தது; மாதவியிடம் மாயமும் பொய்யும் இருத்தல் இயற்கைதான் என்று எண்ணி வெறுத்திடச் செய்தது.

கூறுவது தகுமோ என்று தயங்கித் தன் உள்ளத்தில் கவலையை ஒளித்திருந்தான் கோவலன். கூருமல் தானே அறியட்டும் என்று உரிமையுடன் போராடத் தொடங்கித் தான் உணர்ந்ததை மறைத்தாள் மாதவி. ஆயின், கானல் வரிப்பாட்டு, கோவலனுடைய உள்ளத்தில் வெறுப்பை வளர்த்துக் கவலையைக் கூறுவதற்கே இடம் இல்லாமல் செய்துவிட்டது; மாதவியின் நோக்கம் நிறைவேருமல் செய்து, அவளுடைய நம்பிக்கையையும் பாழாக்கிவிட்டது.

இந்திர விழாவின் முடிவில் மாதவியின் ஆடலும் கோலமும் அணியும் முடிவுறும்போது கோவலன் வெறுப் புற்ற நெஞ்சத்தோடு இருந்ததாக இளங்கோவடிகள் கூறு கிறார். அந்த வெறுப்பு எதனால் ஏற்பட்டது என்ற காரணம் தெளிவாகவில்லை. "அவன் ஊடுதற்குக் காரணம் திருநாள் முடிதலான் வந்த வெறுப்பு; இவள் ஆடலில் காலம் நீட்டித்தலாலும் பலரும் இவளைப் பற்றிப் பார்த்த லின் பொறாமையாலும் வந்த வெறுப்புமாம்" என்கிறார் குறிப்புரைகாரர். "இந்திர விழாவும் மாதவி ஆடலும் அவ்வாடற்குச் சமைந்த கோலமும் ஆடுதலால் பிறந்த அழ கும் முடிதலின் அதனாற் பிறந்த வெறுப்பு......இனி இவள் ஆடலும் கோலமும் தனது அறிவு நிறை ஓர்ப்புக் கடைப்பிடிகளைக் கைக்கொண்டுவிடுதலாலே பிறர்க்கும் இவ்வாறும் என்னும் வெறுப்போடு இருந்தான் எனினும் அமையும்" என்கிறார் அடியார்க்குநல்லார். காதலன் வெறுக்கவேண்டிய அளவிற்குத் தன்னைக் கண்டு பிறர் மயங்க ஆடியவள் அல்லள் மாதவி; அல்லது, அவன் வெறுக்குமாறு நெறிமறந்து நடந்தவளும் அல்லள். கோவல னுடைய அன்பே அவளுக்கு முதன்மையானது; ஆடல் பாடல் கலையையும் அதற்கு அடுத்த நிலையிலேயே அவள் போற்றி வந்தாள். கோவலனுடைய அன்பைப் பெறுவ தற்காகக் கலைச் செல்வத்தையும் வேறு எதையும் துறக்க வல்ல உண்மைக் காதலி அவள். கோவலன் பிரிந்த பின்பு அவள் பசந்த மேனியோடு வாடிய வாட்டமும், வருந்திய வருத்தமும், திருமுகம் பெற மறுத்தபோதும் 'மாலை வாரா ராயினும் காலை வருவர்' என்று எதிர்பார்த்து நம்பிய நம்பிக்கையும், கோவலனுடைய அன்பை இழந்தபின் அனைத்தும் துறந்த துறவுள்ளமும் ஆகிய இவை எல்லாம் இதனைத் தெளிவாக்குகின்றன; கோவலனுடைய அன்பே அவளுக்கு முதன்மையானது என்பதைத் தெளிவாக்கு கின்றன.

ஆகவே, கோவலன் வெறுக்குமாறு அவள் ஆடல்பாடலில் முனைந்திருந்தாள் என்று கூறுவது இளங்கோவடிகளின் கருத்து அன்று. அவனுடைய வெறுப்பின் காரணம் இன்னது என்று கூருமலே, பின்னர்க்கூறும் சொற்களால் உய்த்துணருமாறு வைத்தலே அவருடைய நோக்கமாகும்.

எனவே, இந்திரவிழாவின் முடிவில் கோவலன் வெறுப்புற்றவனுய் இருந்ததற்குக் காரணம், அவன் உற்ற வறுமை பற்றிய கவலையே ஆகும். மாதவியோ இந்தக் காரணத்தை உணரவில்லை; அவனுடைய உள்ளத்தில் இருந்த வறுமைக் கவலையை உணரவில்லை; அவன் வறுமை உற்ற நிலைமையையும் அவள் அப்போது அறியாள். அறிந்திருந்தால், கண்ணகியின் கால்சிலம்பை விற்கும் அளவிற்கு அவன் வறியவன் ஆனுன் என்னும் நிலைமையை மாதவி அறிந்திருந்தால், அடுத்தாற்போல் பலவகை அணிகலன்களையும் ஆடம்பரமாக அணிந்துகொள்ள மனம் வந்திருக்காது. அத்தகைய ஆடம்பரப் பேராசையோ, பொருள் கவரும் நோக்கமோ மாதவிக்கு இல்லை என்பது தெளிவு. அவள் மேற்கொண்ட ஆடம்பர அலங்காரமும் கோவலனை மகிழ்விக்கும் பொருட்டே அல்லாமல், தான் மகிழ்வதற்காக அன்று. அவனுடைய வெறுத்த மனப்பான்மையை மாற்றி மகிழ்விப்பதற்காகவே அன்றும் தன்னை ஆடம்பரமாக அழகுபடுத்திக்கொண்டாள் என்று இளங்கோவடிகள் கூறுகிருர் :

> ஆடலும் கோலமும் அணியும் கடைக்கொள
> ஊடல் கோலமோடு இருந்தோன் உவப்ப...
> நாறிருங் கூந்தல் நலம்பெற ஆட்டி...
> ...அழகுற அணிந்து...மாண்புற அணிந்து...
>
> (சிலப். கடல், 74 - 108)

என்று அவனுடைய வெறுப்பைப் போக்கி மகிழ்விப்பதற்காகவே தன்னை அவ்வாறு மிகச் சிறப்பாக அழகுபடுத்

திக்கொண்டதாகக் கூறுகிருர். கண்ணகியின் கால்சிலம்பை விற்றுப் பிழைக்கும் அளவிற்கு வறுமைஉற்ற நிலைமையை அறிந்திருந்தால், தன் அணிகலன் அனைத்தையும் கொடுத்துக் காக்க முற்பட்டிருப்பாள் மாதவி. ஆனால் அவளுக்கு உண்மை தெரியாது; தன்னையும் விட்டு வேருெருத்தியின் காதலை நாடும் செல்வனுகவே கோவலனைப் பற்றி அன்று தவருக எண்ணினள். கானல்வரிப் பாட்டில் அந்தக் காதல் குறிப்பு இருப்பதாக உணர்ந்தே போராடத் தொடங்கினள்.

எனவே, மாதவியும் கோவலனும் இரங்கத் தக்க நிலையில் இருந்தனர் என்பது தெளிவாகிறது. ஒருவர் உள்ளத்தை ஒருவர் அறியாமல், அறிய முடியாமல், துன்பத்திற்கு ஆளாயினர்.

கானல்வரிப் பாட்டால் முதலில் மாதவி கோவலனைப் பற்றி ஐயுற்ருள். பிறகு கோவலன் மாதவியைப் பற்றி ஐயுற்ருன்; மாதவி ஐயுறுவதற்குக் காரணம் உண்டு; மனைவியை விட்டுத் தன்னை நாடிவந்த கோவலன், செல்வச் சிறப்புக் காரணமாகத் தன்னையும் விட்டு வேருெருத்தியை நாடிச் செல்ல எண்ணியதாக ஐயுற இடம் உண்டு. ஆனல், கோவலன் அவளைப் பற்றி ஐயுறக் காரணம் இல்லை; வறுமைக் கவலையால் மெலிந்த மனமே அவ்வாறு அவனை ஐயுறச் செய்தது. மாதவியின் ஐயுறவு, போராட்டத்தைத் தூண்டி ஏட்டிக்குப் போட்டியாகக் கானல் வரி பாடச் செய்தது. கோவலனுடைய ஐயுறவு, உடனே வெறுப்பாக மாறிச் சொல்லாமல் பிரிந்து போகச் செய்தது.

### காலத்தின் குறை

விலை கூறிக் கேட்டவுடன் ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் கொடுக்கவல்ல செல்வம் படைத்திருந்த காரணத்தால், கோவலன் மாதவியை அடைந்தான். முன்னமே

திருமணம் ஆகியிருந்தும் செல்வம் படைத்த ஒரே காரணத்தால் மற்ருெருத்தியை எளிதில் அடையுமாறு சமுதாய அமைப்பு அவனுக்குத் துணை செய்தது. உண்மையான நாகரிகமுள்ள எந்தச் சமுதாயத்திலும் இந்நிலை இனிக் காண முடியாது. தமிழ்நாடு பலவகையில் நாகரிகம் பெற்று ஓங்கியிருந்த காலமாக இருந்தும், சில துறையில் இத்தகைய பிற்போக்கு மாசும் படர்ந்திருந்தது.

இது கோவலன் மாதவியின் உறவைப் பெற்ற வரலாறு.

மனைவியின் கால்சிலம்பை விற்றுப் பிழைக்க வேண்டிய வறுமையின் நெருக்கடி வந்த காரணத்தால் கோவலன் மாதவியைப் பிரிந்தான். செல்வம் இல்லாதவனுக்கு இத்தகைய உறவு இல்லை என்று அவனே கவலைப்பட்டு, அது காரணமாகத் தீர எண்ணிப் ப்ர்க்கத் தவறி, வெறுத்துப் பிரிந்தான். மாதவியின் நன்மனத்தை அறிந்திருந்தும், அவள் பிறந்த குடும்பத்தையும் சுற்றத்தையும் எண்ணி வெறுத்து நீங்கினுன். ஒரு பெண் பண்பால் எவ்வளவு உயர்ந்தவளாயினும், பிறப்புக் காரணமாக ஐயுறுவதற்கும் பழிப்பதற்கும் அக்காலம் இடம் தந்தது. சாதி வேற்றுமை முதலிய நோய்கள் வேரூன்ருத நல்ல காலமாக இருந்தும், இத்தகைய களங்கம் அன்றைய சமுதாயத்தில் இருந்தது.

இது கோவலன் மாதவியைப் பிரிந்த வரலாறு.

இவ்வாறு செல்வம் சேர்த்து வைக்கவும், வறுமை பிரித்து வருத்தவும் கோவலனும் மாதவியும் வாழ்ந்த வாழ்வில் காணப்படும் குறை அக்காலத்துக் குறையாக இருந்தது.

**குணம் பல**

குறை ஒன்று இரண்டு மாதவியிடம் காணப்படினும் குணம் பல காணப்படுகின்றன.

பிறப்பின் காரணத்தால் அமைந்த கணிகையர் வாழ்விற்குக் கட்டுப்படாமல் கற்புடைய மங்கையாய் வாழ்ந்த நல்வாழ்வு முதலாவதாகப் போற்றத்தக்கது. அவளுடைய காதலின் பெற்றியை ஆராய்ந்தபோதே அது நன்கு விளங்கியது.

அடுத்தாற்போல் போற்றத்தக்கது: கலையரசியாய் வாழ்ந்த மாதவி கலையின் செல்வாக்கால் மனம் மென்மைப்பட்டு அலைந்து கெடாமல், அதைக் கடந்து உறுதியுடன் வாழ்ந்த சிறப்பாகும்.

## கலையின் இயல்பு

கலை, மனத்தை நெகிழ்விப்பது ; புலன்களை நுண்மைப் படுத்துவது ; அறிவின் தலைமையை மாற்றிப் புலன்களுக்குத் தலைமை நல்குவது. சிறப்பாக ஆடல்கலைக்கும் ஓவியக் கலைக்கும் இந்தத் தன்மை மிகுதி. அவை புலன்களை ஒட்டியே பெரும்பாலும் இயங்குவதே இதற்குக் காரணம். ஒரு கலை புலன்களை எவ்வளவு ஒட்டி அமைகிறதோ, அவ்வளவிற்கு அந்தக் கலையில் வல்ல கலைஞன் புலன்களுக்கு அடிமையாக வாய்ப்பு உண்டு. இலக்கியக் கலையும் இதற்கு விதிவிலக்கு அன்று. புலன்களின் உணர்வே பெரிதாய் அறிவின் தெளிவு குறைவாய் உள்ள இலக்கியக் கலை, கலைஞரைப் புலன்களுக்கு அடிமைப்படுத்தவே முயலும். புலன்களின் உணர்வு குறைவாய், அறிவின்தெளிவே மிகுதியாய் அமைந்த இலக்கியக் கலை, கலைஞரை அடிமைப்படுத்தாமல் உயர்த்திவிடும். இங்கு மாதவி கற்ற கலை, ஆடல் பாடல் அழகு என்னும் மூன்றுமாகும். இவற்றுள் ஆடல் கலையும் அழகுக்கலையும் புலன்களைக் கடந்து வாழமாட்டாத கலைகள். ஆதலின் மாதவி ஒரு நெறியாக மனம் வைத்து வாழ்ந்து இறுதியில் துறவும் பூண்டாள் என்றால், அவளுடைய உள்ளத்தின் இயல்பான உறுதியே அதற்குக் காரணம் எனலாம். அந்த உறுதி காதலின் பெற்றியால்

கலங்கா நிலையை—கலையின் செல்வாக்காலும் மாருத நிலையைப்—பெற்றுவிட்டது. கலையரசி ஒருத்தி கலையின் உணர்வால் சிறிதும் நிலைகலங்காமல் கற்புள்ளத்தோடு வாழ்ந்து சிறப்புற்ருள் என்ருல், அது வாழ்வில் பெரிய தொரு வெற்றியே ஆகும்.

கலையே குறிக்கோளாய்க் கலையே வாழ்வாய்க் கலைத் துறையில் காலம் கழிப்பவர்கள் ஒழுக்கத்தோடு வாழ்தல் அருமையாக உள்ளது. அத்தகைய கலைஞரில் ஒரு சிலரே ஒழுக்கம் காக்கும் உரவோராக வாழ முடிகிறது. இந்த உண்மையை எந்த நாட்டிலும் எக்காலத்திலும் கண்டு தெளியலாம். தெளிந்தால்தான், மாதவி போன்ற கலையரசி, பிறப்பின் தீய சூழலையும் கடந்து, கலையின் பொல்லாத ஆற்றலையும் கடந்து ஒருநெறிப்பட்டு வாழ்ந்த சிறப்பு விளங்கும்.

கோவலன் மாதவிக்கு நிகரான கலைஞன் அல்லன். அவன் மாதவியின் மனம் மகிழ யாழ் இசைக்க வல்லவன். ஆயின், மாதவியோ 'நிலத்தெய்வம் வியப்பெய்த நீள்நிலத் தோர் மனம்மகிழ' யாழ் இசைக்க வல்லவள். ஆதலின், கோவலன் கலையில் வல்லவன் என்பதைவிட, கலை நுகர்வில் வல்லவன் என்பதே மிகப் பொருந்தும். அந்த அளவிற்கு அவனுக்குக் கலைமனம் அமைந்திருந்தது. நெகிழ்ந்த நெஞ் சினனய், புலன்களுக்கு அடிமைப்பட்டு வாழ்ந்த காரணத் தால்தான், முன்னதாக எண்ணித் துணியாமல் மனம் சென்ற வழியே சென்று அல்லல் பல பட்டான். ஒரு நிலையி லிருந்து மற்ருெரு நிலைக்கு நொடிப்பொழுதில் மாறும் தன் மையும், மாறிய பின்பு நினைந்து வருந்தும் தன்மையுமே அவனிடம் காண்கிருேம். வருமுன்னர்க் காக்கும் திறன் அவனிடம் இல்லை; எண்ணித் துணியும் ஆற்றல் அவனிடம் இல்லை; எற்றென்று இரங்குவ செய்யாத உரம் அவனிடம் இல்லை. சென்ற இடத்தால் செல்லவிடாது தீது ஒரீஇ நன் றின்பால் உய்க்கும் அறிவும் அவனிடம் இல்லை. ஆயினும்,

**நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி**
**நறுமலர் மேனி நடுங்குதுயர் எய்த**
**அறியாத் தேயத்து ஆரிடை உழந்து**
**சிறுமை உற்றேன் செய்தவத் தீர்யான்**

(சிலப். ஊர்காண். 16-20)

என்று கவுந்தியடிகளைக் கைதொழுது ஏத்தி முறையிடும் போது கோவலனைப் பற்றி இரக்கமே தோன்றுகிறது.

**மாயங் கொல்லோ வல்வினை கொல்லோ**
**யான்உளம் கலங்கி யாவதும் அறியேன்**

(சிலப். கொலைக். 61-62)

என்று அவன் கண்ணகியிடம் கூறி வருந்தியபோதும், அவனுடைய நெகிழ்ந்த நெஞ்சையும், செய்வது அறியாமல் கலங்கிய கலக்கத்தையும் எண்ணி இரக்கம் மிகுகிறது.

மேற்குநாட்டுக் கலைஞர்களின் வரலாறுகளை ஆராய்ந்தாலும், அவர்களுள் பலருடைய வாழ்க்கை இரங்கத்தக்கதாக உள்ளது. இலக்கியக் கலைஞரும் இதற்கு விதிவிலக்கு அல்லர். எடுத்துக்காட்டாகக் கூறத்தக்கது ஆங்கிலக் கவிஞர் ஷெல்லியின் வாழ்க்கை. அவருடைய முதல் மனைவி ஹாரியெட் என்பவர் கணவருக்கு ஏற்ற நற்பண்பு வாய்ந்த துணைவியாகவும் தூய ஒழுக்கமும் உண்மையும் பிறர் மதிக்கத் தக்க செயல்முறையும் வாய்ந்தவராகவும் விளங்கியதாக அந்த அம்மையாருடன் பழகியவர் கூறியுள்ளனர். கணவரிடம் பேரன்பு கொண்டவர் என்றும், கணவருடைய மனப்போக்கை அறிந்தே நடந்தார் என்றும், சமூகத்தில் கலந்து பழகும்போதாயினும் வீட்டில் தனித்திருக்கும் போதாயினும் வெளியூர்க்குச் செல்லும்போதாயினும் எப்போதும் குறைகூற முடியாதவாறு ஒழுகினர் என்றும் கூறியுள்ளனர். ஆயினும் ஷெல்லியின் மனம் வேறோர் அம்மையாரின் உறவை நாடியதும், முதல்மனைவியார் ஹாரியட்

கைவிடப்பட்டார். *1814* ஜூலை *7*-ல் நண்பர் ஒருவருக்கு அந்த அம்மையார் எழுதிய கடிதத்தில் தம் கணவர் இருக்கும் இடத்தைக் கண்டறிந்து எவ்வாறேனும் வீட்டிற்கு வரச்செய்யுமாறு வேண்டிக்கொண்டார். அந்த ஏழை நெஞ்சம் அப்போது ஷெல்லியின் புதிய உறவைப்பற்றி ஒன்றும் அறியாமல் கலங்கிய நிலையில் இருந்தது; உண்மை அறிந்த பிறகு நொந்து நைந்தது. *1816* டிசம்பரில் அந்த அம்மையார் ஓர் ஆற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்டார். அதே திங்களில் *30*-ம் நாளில் ஷெல்லி இரண்டாம் மணம் செய்துகொண்டு, புதிய காதலியை மனைவியாக்கிக்கொண்டார். அப்போது கவிஞரின் நெஞ்சம் அவ்வளவாக வருந்தவில்லை எனினும், நாளடைவில் ஹாரியெட் அம்மையாருக்காக அவர் உற்ற ஆழ்ந்த வருத்தம் நெடுங்காலம் அவருடைய உள்ளத்தை அரித்துவந்தது. (The Life of Percy Bysshe Shelly, Memoirs of Shelly by Thomas Love Peacock, pp. *337-344, 361-364.*) இவ்வாறே கலைஞருள் பலர் வாழ்ந்த வாழ்க்கை இரங்கத்தக்கதாக உள்ளது.

**வாழ்க்கையின் வெற்றி**

அறிவைப் போற்றி வாழ்வோர் வாழ்க்கையில் வெற்றி பெறுவது போல், கலையைப் போற்றி வாழ்வோர் வெற்றி பெறுவது அரிது. காரணம் என்ன? வாழ்க்கையின் பல பக்கங்களையும் ஒருங்கே கண்டு சீர்தூக்கி நன்மை தீமை தெளிவதற்கு அறிவு துணைசெய்கிறது. ஆயின், கலையுணர்வோ, கண்ட ஒரு பக்கத்தையே எல்லாம் என்று உணரச் செய்து மற்றப் பக்கங்களை மறக்கச் செய்கிறது; பலவற்றையும் ஒப்பிட்டுச் சீர்தூக்கவோ, நன்மை தீமைகளை உள்ளவாறு தெளியவோ அது உதவுவதில்லை. ‘தோள் கண்டார் தோளே கண்டார், தாள் கண்டார் தாளே கண்டார்’ என்பதே கலை ஒன்றுமட்டும் போற்றுவோரின் நெறி.

அவர்களின் வாழ்க்கை பெரும்பாலும் யானையின் ஒவ்வோர் உறுப்பைக் கண்டு அதுவே யானை அதுவே யானை என்று உணர்ந்த குருடர்களின் கதைபோன்றது. அவர்கள் ஒன்றை விட்டு ஒன்றைப் போற்றினும், விட்டதை உடனே மறப்பர், பழிப்பர். ஒரு நூலைப் போற்றத் தொடங்கின், மற்றொரு நூலைப் பழிப்பர். இதைப் போற்றத் தொடங்கின் அதைப் பழிப்பர். இரண்டிலும் குணமும் உண்டு குற்றமும் உண்டு என இரு தன்மையும் நாடி மிக்கதைக் கொள்ளும் பொறுமையும் திறனும் இல்லாமல் இடர்ப்படுவர். மாதவியின் அன்பைப் பெற்றதும், குற்றமற்ற கண்ணகியை மறந்தான் கோவலன்; மாதவியிடம் வெறுப்புக்கொண்டு கண்ணகியை நாடித் திரும்பியவுடனே மாதவியைப் பழிக்கத் தொடங்கினான். 'சலம்தரு கொள்கைச் சலதி' (பொய்யும் வஞ்சமும் உடையவள்) என்று பழித்தான். "அவள் தீது இலள் (குற்றம் அற்றவள்). யானே குற்றம் உடையேன்" என்று உணரச் சில நாட்கள் ஆயின. குணம் கண்டபோது குணமே கண்டான்; குற்றமும் உடன்காண முடியவில்லை; குற்றம் கண்டபோது குற்றமே கண்டான்; குணத்தை நினைக்க முடியவில்லை. மாதவியிடம் இத்தகைய குறை காண முடியவில்லை; கோவலனிடம் அவள் கொண்ட அன்பு இறுதிவரையிலும் மாறவில்லை; துறந்தபின்னும் மாறவில்லை; தூய்மையே பெற்றது.

வாழ்க்கை, சிங்கநோக்கு உடையவர்க்கே வெற்றி நல்குவது; இப்பக்கமும் அப்பக்கமும் பார்த்துப் பார்த்துச் செல்வதே வாழ்வோரின் கடமையாக உள்ளது. அதற்கு அறிவின் துணை வேண்டும். அதனால்தான் திருவள்ளுவர்,

**அறிவுஅற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும்**
**உள்அழிக்க லாகா அரண்** (குறள். 421)

**எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**
**அதிர வருவதோர் நோய்** (ஷை 429)

அறிவுடையார் எல்லாம் உடையார் ; அறிவிலார்
என்உடைய ரேனும் இலர் (ஷை 430)

என்று அறிவின் சிறப்பை வலியுறுத்தியுள்ளார். அறிவின் வளர்ச்சிக்கும் அறிவின் ஆட்சிக்கும் உறுகருவியாகக் கலையைக் கொள்வதால் தீங்கு இல்லை; நன்மையே விளையும். அவ்வாறன்றி, கலையுணர்ச்சிக்குத் தலைமை நல்கின், அறிவின் போக்கிற்கு நேர்மாருகவும் அது வாழ்க்கையைச் செலுத்திவிடும். வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்க நோக்கு, அற்றம் காக்கும் திறன், எதிரதாக் காக்கும் ஆற்றல் ஆகிய இவை இல்லாதவராய்த் தடுமாற நேரும்; "யான் உளம் கலங்கி யாவதும் அறியேன்" என்று, செய்த செயலின் விளைவு காணும்போது கலங்கி வருந்த நேரும்; ஒன்றை அளவு கடந்து போற்றும்போது, மற்ருென்றை அளவு கடந்து தூற்றியோ அல்லது அடியோடு மறந்தோ இடர்ப்பாட்டைத் தேடிக்கொள்ள நேரும். கோவலன் வாழ்க்கையைக் கெடுத்தது இந்தப் போக்குத்தான். ஆயின், கலையே வாழ்வாகக் கொண்ட மாதவி ஒருநாளும் அதற்கு இரையாகித் தடுமாருமல் வாழ்ந்த திட்பம் நினைந்து நினைந்து போற்றத்தக்க சிறப்பு உடையதாக விளங்குகிறது. ஒரு பக்கம் சமூக அமைப்பு அவளைக் கணிகை எனத் தாழ்த்த, மற்ருெரு பக்கம் கலையுணர்ச்சி புலன்களுக்கு அடிமையாக்கி அலைக்க, வாழ்க்கையில் வீழ்ச்சி உற்று அழிந்திருக்க வேண்டிய ஒருத்தி, படிப்படியே உயர்ந்து கண்ணகிக்கு நிகரான கற்புடையவளாய், உயர்ந்த பண்பு உடையவளாய், விளங்கியதை நினைந்து வியத்தல் வேண்டும்.

## அறம் ஆட்கொள்ளல்

கலையால் மாதவி மயங்கவில்லை. ஆனல் மாதவியின் கலை கோவலனை மயக்கியது. தான் மயங்காமல் நின்றே மற்றவரை மயக்கும்வகையில் மாதவி கலையைக் கருவியாக்கிக்கொண் டிருந்தாள்.

கோவலன் மாதவியின் கலையால் மயங்கினான்; அவளுடைய ஆடல்கலை அவனுடைய உள்ளத்தைக் கவர்ந்தது; அழகுக்கலை பல ஆண்டுகள் வரையில் அவனை மயக்கியிருந்தது. மாதவியின் கானல்வரியில் விளங்கிய பாடல்கலையும் அவனை மயங்கச் செய்தது; உண்மை உணராமல் மயங்கச் செய்தது; தன் காதல் குறிப்பை உணர்ந்து ஊடும் வகையில் மாதவி பாடினாள் என்ற உண்மையை அவன் உணரவில்லை; ஊடல் என்று உணராமல் உண்மையாகவே அவள் தன்னை வஞ்சிப்பதாக மயங்கினான்.

ஆடல் பாடல் அழகு என்ற மூன்றையும் மாத்வி பல ஆண்டுகள் கற்றுத் தேர்ந்தாள். ஆடல்கலை அவளுக்குக் கோவலனுடைய உறவை நாடித் தந்தது; அழகுக் கலை அவனுடைய உறவைக் காக்க உதவியது; பாடல்கலை அந்த உறவைப் பிரித்துவிட்டது. இறுதியில் மூன்று கலையையும் துறந்து அறவண அடிகளின் அறநெறியில் தலைப்பட்டாள் மாதவி.

இளங்கோவடிகள் ஆடல் பாடல் அழகுக் கலைகளை மதுரைக்காண்டத்தில் பலபட விரித்துரைக்கிறார்; தெவிட்டத் தெவிட்ட விளக்குகிறார். தாம் கற்றறிந்த கலைகளாலும் கேட்டறிந்த கலைகளாலும் பெற்ற விளக்கங்களை எல்லாம் எடுத்துரைக்கிறார். இறுதியில் எல்லாவற்றையும் அறத்திற்கு அடிமையாக்குகிறார் என்பதை மாதவியின் துறவால் அறிகிறோம்; அந்தக் கலையரசியின் வயிற்றில் பிறந்த அறச்செல்வியான மணிமேகலை பெற்ற நல்வாழ்வாலும் அதனை அறிகிறோம்.

## அன்பின் ஆற்றல்

கோவலனுடைய காதலியர் இருவரும் இருவேறு வகையில் வாழ்க்கை அமைந்தவர். கண்ணகியின் வாழ்க்கை முதலிலேயே பண்பட்டு அமைந்துவிட்ட வாழ்க்கை. மாதவியின் வாழ்க்கை படிப்படியாகப் பண்பட்டு அமைந்த

வாழ்க்கை. ‘மாற்று உள்ள வாழ்க்கையேன்’ என்று கண்ணகியே தன் வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிட்டாள்; தவறு செய்துவிட்டுப் பிறகு அதை நினைந்து வருந்தும் நிலைமை கண்ணகிக்கு இல்லை; குடும்பப் பண்பாட்டால் பிறழாமல் சென்றது அவளுடைய வாழ்க்கை. மாதவியின் வாழ்க்கையோ, குப்பையில் முளைத்த குருக்கத்தி போல் குறை மிகுந்த சூழலில் வளர்ந்தும் குணம்நிறைந்து வாழ்ந்த வாழ்க்கை ஆயிற்று; தான் செய்த தவறு நினைந்தும் தன் சூழ்நிலையை நினைந்தும் வருந்தித் திருந்தி உயர்ந்தாள் மாதவி.

அன்பைப் பெருக்கி உரிமையைத் தானாகவே இழந்த வாழ்க்கை கண்ணகியின் வாழ்க்கை. ஒத்தஅன்பை நோக்கி உரிமைக்காகப் போராடிய வாழ்க்கை மாதவியின் வாழ்க்கை. தன்னைத் துறந்து பல ஆண்டுகள் வேறொருத்தியிடம் வாழ்வது அறிந்தும் அதற்காக உரிமை கொண்டு போராடாதவள் கண்ணகி. அங்கிருந்து கணவன் திரும்பி வந்த போதும், தனக்கு என்று உரிமை அற்றவளாய், மதுரைக்குப் புறப்படு என்றதும் புறப்பட்டவள் அவள். அச்சத்தால் அடங்கி நடக்காமல் அன்பால் இணங்கி நடந்து உரிமையைத் தியாகம் செய்தவள் அவள். அதனால் ஓரளவு வெற்றியும் பெற்றாள்; கணவன் திருந்தியபின் அவனுடைய அன்புக் கண்ணீரையும் கண்டாள்.

மாதவியோ, கோவலன் தன்னை விட்டு இன்னொருத்தியின் காதலை நாடுவானோ என்று ஐயுற்ற அளவிலேயே உரிமைப்போர் தொடங்கினாள். கண்ணகிபோல் அன்புக்குத் தலைமை நல்காமல், உரிமைக்குத் தலைமை தந்தாள். உரிமைப்போர் வெற்றி நல்காதபோது, உரிமைப் போருக்கு இடம் இல்லாமற் போனபோது, வருந்தினாள்; உரிமையைத் துறந்தாள். ஐயுற்ற அளவில் போராடிய தன் குற்றத்தை நினைந்து வருந்தினாள். பல ஆண்டுகளாக உரிமை இழந்திருந்தும் போராடாமல் பொறுத்திருந்த

கண்ணகியைப் பாராட்டினுள்; மாபெரும் பத்தினி எனப் போற்றினுள்.

மகனிடம் தாயும் அன்பு செலுத்துகிருள்; தந்தையும் அன்பு செலுத்துகிருன். தாயின் அன்பு பயன் நோக்காத அன்பு, உரிமை கேட்காத அன்பு, தியாகம் செய்யும் அன்பு. தந்தையின் அன்பு பயன் சிறிதேனும் எதிர்நோக்கும் அன்பு, உரிமை கேட்கும் அன்பு, அளந்தறியும் அன்பு. உலகியல்அறிவும் செயல்திறனும் கருதித் தந்தையை நாடுகிருன் மகன். வாழ்க்கையில் நெருக்கடி நேரும்போது திறன் மிக்க தந்தையின் அன்பு சலிக்கிறது; கரவு அற்ற தாயின் அன்பு சலிப்பதில்லை. உரிமை கோரும் தந்தையை எதிர்க்கவும் துணிகிறது, வெறுக்கவும் துணிகிறது மகனுடைய மனம். உரிமைப் பேச்சும் எண்ணமும் இழந்து வாழும் தாயின் அன்புக்கு அடிமையாகிறது அவனுடைய மனம். அந்நிலையில் தாயின் ஆற்றலை உணர்கிருன் தந்தை.

கோவலன் கண்ணகியிடத்தும் காதல் கொண்டான்; மாதவியிடத்தும் காதல் கொண்டான். கண்ணகியுடன் வாழ்ந்த வாழ்க்கையில் எளிமையும் தூய்மையுமே கண்டான்; கலையும் திறனும் காணவில்லை. கொண்ட குறிக்கோளும் பெற்ற பண்பாடுமே போதும் என்று வாழ்ந்தவள் கண்ணகி; கணவனுடைய மனவளர்ச்சிக்கு ஏற்றவாறு தானும் கற்று வளர விரும்பவில்லை; "கற்பனவும் இனி அமையும், காதலனுடைய அன்புதான் வேண்டும்" என்று எந்த உயர்வையும் நாடாமல் நின்றுள். மாதவியோ கலையரசியாக விளங்கிக் கோவலனுடைய உள்ளத்தைக் கவர்ந்தாள்; அவனுடைய மனநிலையை அறிந்து அதற்கு ஏற்ப அமைந்து வாழ்ந்தாள்; செல்வச் சிறப்புத் தோன்ற ஆடம்பரமாக வாழ்தல், கடல்விளையாட்டைக் கண்டு மகிழ்தல், யாழ் இசைத்தல், கானல்வரி பாடுதல் முதலிய எல்லாவற்றிலும் ஒத்த நிலையில் அமைந்து மகிழ்வித்தாள். நெருக்கடி நேர்ந்தது. மாதவியை வெறுத்துக் கண்ணகியை நாடியது

கோவலனுடைய மனம். கண்ணகிக்காகக் கசிந்து கண்ணீர் விடும் நெஞ்சினன் ஆனான் அவன். கலைச்செருக்கு அமைந்த கடிதத்தால் பயனில்லை என்று மாதவி உணர்ந்தாள்; கண்ணகிபோல் எளிமையும் தூய்மையும் கொண்டு கடிதம் எழுதினாள்; அதனால் கோவலனுடைய மனத்தையும் மாற்ற முடிந்தது; "மாதவி குற்றம் அற்றவள், எல்லாம் என் குற்றமே" என்று கோவலனே உணருமாறு செய்ய முடிந்தது. இவ்வாறு மாதவி அன்பின் ஆற்றலை உணர்ந்தாள்; அதற்குள் காதலனுடைய வாழ்வே முடிந்தது. காதலனை இழந்த மாதவி காதலையும் துறந்தாள்.

கண்ணகியின் வாழ்வு கணவனுக்காகவே வாழ்ந்து கணவனுக்காகவே முடிந்தது. மாதவியின் வாழ்வு காதலில் நின்று பிறகு அதையும் கடந்து அறத்துறையில் சென்றது. மனம் மாறிய மாதவி, பிறந்த குடும்பத்தின் தீமையை வேருடன் களைந்தாள். அது போன்ற மற்றக் குடும்பங்களின் சீர்திருத்தத்திற்கு வழிகாட்டியாக விளங்கினாள். பெரும் புரட்சி செய்தாள். கலையின் வளர்ச்சிக்காக மங்கையர் சிலரின் வாழ்வைக் கெடுக்கும் மடமையைக் கொளுத்தினாள். அரசன் திகைக்க, ஊரார் வியக்க, சுற்றத்தார் இரங்க, பெற்ற தாயும் வருந்த, சீர்திருத்தம் செய்தாள் கணிகையரின் வாழ்வுக்கும் தனக்கும் தொடர்பு இல்லை என்பதை நாடு அறியச்செய்தாள். தன் வயிற்றில் பிறந்த மணிமேகலையைத் தமிழகத்தின் தவச்செல்வி ஆக்கினாள். சிறைக்கோட்டத்தை அறக்கோட்ட மாக்குதல், அமுதசுரபி ஏந்திப் பசிப்பிணி தீர்த்தல் முதலிய அறப் பெருஞ் செயல்கள் செய்து தொண்டு ஆற்றி உலகப் பெருமாதரில் ஒருத்தியாக விளங்கிய மணிமேகலையைப் பெற்ற தாய் என்று உலகம் புகழுமாறு உயர்நிலை உற்றாள் மாதவி.